இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்டி எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust

KDK SINCE 1909 JAPAN

அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us

# தமிழன்

THAMILAN தமிலன්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 74 சோபகிருது வருடம், புரட்டாதி மாதம் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(03.10.2023) ஹிஜ்ரி 1445, ரபிஉல் அவ்வல் - 17, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

Special offer
1st to 31st October 2023

KDK SINCE 1909 JAPAN

DISCOUNT 15% (On selected models only) Cash or Card *Conditions apply

Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust

அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
Inquiries: 011 250 0823 | 011 236 8472 | 73 | 74



# வடக்கு, கிழக்கில் முடங்கும் நீதித்துறை!

## முல்லைத்தீவு நீதிபதிக்கு நீதிகோரி சட்டத்தரணிகள் போராட்டத்துக்கு சூளுரை

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா மீதான உயிர் அச்சுறுத்தலால் அவர் நாட்டை விட்டு வெளியேறிய சம்பவத்துக்கு காரணமானவர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் சட்ட ஆட்சிக்கு உத்தரவாதமளிக்க வலியுறுத்தியும் வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் சட்டத்தரணிகள் போராட்டம் நடத்தவுள்ளனர். 02 பக்கம்

## முல்லை. நீதிபதி இராஜினாமா விசாரணையை ஆரம்பிக்குக!

### அமைச்சர் டிரான் சி.ஐ.டிக்கு உத்தரவு



முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பதவியிலிருந்து இராஜினாமா செய்து நாட்டை விட்டு வெளியேறியமை தொடர்பில் முழுமையான விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு நேற்று (02) உத்தரவிட்டுள்ளார்.

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பான தீர்ப்பை அடுத்து எதிர்கொண்டுவந்த... 02 பக்கம்

## விசாரணைகளை தீவிரப்படுத்துமாறு சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து



முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்ளுமாறு சட்டத்தரணிகள் சங்கம், பிரதம நீதியரசரை சந்தித்து நேற்று (02) வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்றுக் காலை இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவை இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத்ன, உபதலைவர் நலிந்த இந்ததிஸ்ஸ, செயலாளர் இசுறு பலபத்தபெண்டி, யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்க தலைவர் தவபாலன்... 02 பக்கம்

## எரிபொருள் விலையேற்றம்

### பெற்றோல் - 04, டீசல் -10 மண்ணெண்ணெய் - 11



எரிபொருட்களின் விலைகள் நேற்று முன்தினம் (01) நள்ளிரவு முதல் அதிரடியாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதற்கிணங்க, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சிபெட்கோ), லங்கா ஐ.ஓ.சி. ஆகிய நிறுவனங்கள் நேற்று முன்தினம் நள்ளிரவிலிருந்தும் சினோபெக் நிறுவனம் நேற்று முன்தினம் மாலை 06 மணியிலிருந்தும் அமுலுக்கு வரும்... 02 பக்கம்




பதவி விலகிய முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு நீதி கோரியும் அவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று (02) கிளிநொச்சி நகரில் இடம்பெற்றது.

## லிட்ரோ எரிவாயு விலை உயர்வு?




லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலைப்பட்டியல் நாளையதினம் (04) திருத்தியமைக்கப்படுவதற்கு அதிக வாய்ப்பிருப்பதாக அந்த நிறுவனத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விலை சூத்திரத்துக்கமைய ஒவ்வொரு மாதமும் எரிவாயுவின் விலையை திருத்தியமைக்க முடியும் என்பதுடன், கடந்த செப்டெம்பர் மாதம் 05ஆம் திகதி 12.5 கிலோகிராம்... 02 பக்கம்

## மக்களை அடக்கியாளவே அரசாங்கம் முயற்சிக்கிறது

### அமெரிக்கத் தூதுவரிடம் சொல்கிறார் சஜித்



மக்களை அடக்கி ஆள்வதற்காக அரசாங்கம் பல்வேறு புதிய சட்டங்களை கொண்டுவர முயற்சி செய்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிடம் தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## வாகன வரி அனுமதிப் பத்திரங்கள் வீடுகளுக்கே

### எதிர்வரும் 7ஆம் திகதிமுதல் அமுல் இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்



அனைத்து வாகன வருமான வரி அனுமதிப் பத்திரங்களையும் விநியோகிக்கும் புதிய கட்டமைப்பு (eRL 2.0) அறிமுகப்படுத்தல், எதிர்வரும் 07ஆம் திகதிமுதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாணங்களிலும் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர், இந்தப் பொறிமுறையின் ஊடாக வீட்டிலிருந்தவாறே மக்களுக்கு வாகன வருமான வரி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் வசதிகள் கிடைக்கும் என்றும் தெரிவித்தார். 02 பக்கம்

## பஸ் கட்டணம் அதிகரிக்காது

### தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு



கே.சுபானி

எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளபோதிலும் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட மாட்டாது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன நேற்று(02) தெரிவித்தார். பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பில் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். 02 பக்கம்

## நீதித்துறையில் மேலாதிக்க சிந்தனை வேண்டாம்

### மீறினால் விபரீதமென ரிஷாட் எம்.பி. எச்சரிக்கை



நீதித்துறைக்கு ஏற்படுத்தப்படும் அழுத்தங்களால், சர்வதேச உதவிகளை நம்பியுள்ள நாட்டின் எதிர்காலத்துக்கு பாரிய நெருக்கடிகள் ஏற்படலாமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவின் இராஜினாமா குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மேலாதிக்கச் சிந்தனையில் சில அரசியல்வாதிகள் இன்னும் செயற்படுவதையே நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகள் மீதான அழுத்தங்கள் புலப்படுத்துகின்றன. 02 பக்கம்

## கோட்டாவின் ஆட்சியில் வரிவருமானம் பாரிய வீழ்ச்சி

### சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் வரி வருமானம் முன்னர் ஒருபோதும் இல்லாதளவுக்கு வீழ்ச்சியடைந்து காணப்பட்டதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



நீதிபதிக்கே நீதி கேட்டு போராடிய நாடு உலகத்தில் உண்டோ..?

## பிள்ளையான் தரப்பு அரசின் கூலிப்படை

### மீண்டும் உறுதிப்படுத்தினார் ஆசாத் மௌலானா



பிள்ளையான் என்றழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு, அரசிடம் பணம் பெற்றுக்கொண்டு இராணுவக்கூலிப்படையாக செயற்பட்டு வந்ததாக அந்த அமைப்பின் முன்னாள் பேச்சாளர் ஆசாத் மௌலானா மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார். 02 பக்கம்

## மகாநாயக்கராக வேடம் தரித்து பணமோசடி செய்த ஆசாமி





ஆ.ரமேஸ்

வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்புவதாகவும் மல்வத்து மகாநாயக்க தேரர் போன்று வேடம் தரித்தும் நாடளாவிய ரீதியில் பல இலட்சம் ரூபா பண மோசடியில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர். 02 பக்கம்

### உஷ்



ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாக பதவிகளுக்கு கடும் போட்டி நிலவுகிறது.

கட்சியின் பொதுச் செயலாளராக ரவி கருணாநாயக்க நியமனம் பெறவிருந்தார். ஆனால் அதை அவருக்கு வழங்காமல் வேறு ஒருவருக்கு வழங்குமாறு கட்சியின் மேலிடத்துக்கு அழுத்தங்கள் வழங்கப்பட்டுள்ளதாம்.

என்ன செய்வதென்று தெரியாமல் நிர்வாகிகள் தெரிவை ஒத்திவைத்துள்ளாராம் ரணில்..

## வடக்கு, கிழக்கில் முடங்கும்...

முதற்கட்டமாக காலவரையின்றிய பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் அறிவித்துள்ளனர். நேற்று (02) முதல் முல்லைத்தீவு சட்டத்தரணிகள் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாக ஒருவரும் இன்னும் நியமிக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இதேவளை, வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் சட்டத்தரணிகள் போராட்டம் மேற்கொள்வது பற்றி, அந்தந்த சட்டத்தரணிகள் சங்கங்கள் தற்போது கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளன. வடக்கு, கிழக்கு தழுவிய போராட்டத்தை மேற்கொண்டு, இறுதியில் முல்லைத்தீவில் போராட்டம் மேற்கொள்ளும் உத்தேசத்துடன் இந்த கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்த விவகாரத்தில் உரிய நடவடிக்கை யெடுக்க வலியுறுத்தி யாழ் மாவட்டத்தில் இன்றும் (03) நாளையும் (04) சட்டத்தரணிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

யாழ்ப்பாணம், மல்லாகம், பருத்தித்துறை, சாவகச்சேரி சட்டத்தரணிகள் சங்கத்தினர் இரு நாட்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளனர்.

இன்று யாழ்ப்பாணத்திலிருந்து சென்று முல்லைத்தீவில் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். நாளை யாழ்ப்பாணத்தில் மனிதச்சங்கிலி போராட்டத்தில் கலந்து கொள்வர்.

## பஸ் கட்டணம் அதிகரிக்காது...

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

டீசலின் விலை நேற்றுமுன்தினம் (01) இரவு அமுலுக்கு வரும் வகையில் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும், பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது.

தேசிய பஸ் கட்டண கொள்கையின் பிரகாரம் எரிபொருட்களின் விலை 04 சதவீதத்தைவிட அதிகரித்தால் மாத்திரமே பஸ்கட்டணம் அதிகரிக்கப்படும். ஆனால், தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள 10 ரூபா விலை அதிகரிப்பானது 02 சதவீதமாகவே காணப்படுகிறது. அதன் காரணமாக பஸ் கட்டண அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. மாதாமாதம் எரிபொருள் விலை அதிகரிக்கப்படும் பட்சத்தில் தேசிய கொள்கையிலும் மாற்றங் கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு பரிகாரமாக விரைவில் அனைத்து பஸ்களிலும் மாதாந்த பருவச்சீட்டை அறிமுகப்படுத்த வேண்டும் எனவும் கூறினார்.

## கோட்டாவின் ஆட்சியில்...

இலங்கையின் ஆட்சி குறித்த சர்வதேச நாணய நிதியத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

2022இல் அப்போதைய அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளுக்கு எதிரான தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்கள் பொருளாதார நெருக்கடிக்கு ஊழலே காரணம் என்ற பொதுக்கருத்தை உருவாக்கியிருந்தன.

கோட்டாபய ராஜபக்ஷவின் நிர்வாகத்தின் கீழ் காணப்பட்ட அதிகார அமைப்பு தனித்துவமான நிர்வாக சிக்கல்களை உருவாக்கியது.

குடும்ப உறவுகளால் இறுக்கமாக இணைக்கப்பட்ட தனிநபர்களின் குழுவின் கைகளில் அதிகப்படியான அதிகாரம் குவிந்திருப்பது ஒரு சிறிய உயரடுக்கின் அரசியல் அதிகாரத்தை வலியுறுத்துவதற்கும் பொது அதிகாரத்தை ஒருங்கிணைக்கப்பட்ட முறையற்ற பயன்பாட்டுக்கு உதவுவதற்கும் உதவியது.

கோட்டாவின் அரசாங்கம் சுமார் மூன்று வருடங்களுக்கும் குறைவான காலமே ஆட்சியிலிருந்த போதிலும் அதன் பதவிக்காலத்தில் வரி வருமானத்தில் பேரழிவுகரமான சரிவு காணப்பட்டது. முதலீட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது ஒளிபுகா சூழ்நிலையில் அரச சொத்துகள் மீதான கட்டுப்பாட்டை வழங்கியது. விரிவான நீண்ட கால சலுகைகளை வழங்கியது. அத்துடன் வெளி மற்றும் உள்நாட்டு கடனில் வியத்தகு அதிகரிப்பு ஏற்பட்டது.

முன்னைய ஏற்பாடுகளையும் நிறுவனங்களையும் மீண்டும் ஏற்படுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் நடவடிக்கைகள் கடந்த ஆண்டுகளில் பரவலாக வெளிப்படுத்தப்பட்ட நிர்வாக சவால்கள் மற்றும் ஊழல் சவால்களை எதிர்கொள்வதற்கு போதுமானவை அல்ல எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விசாரணைகளை...

ஆகியோர் சந்தித்து உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதாக பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், முல்லைத்தீவு நீதிமன்றத்தின் பதில் நீதிபதியை, நீதிபதியாக அறிவிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## மக்களை அடக்கியாளவே...

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று (02) எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது. அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது இலங்கையின் தற்போதைய சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி இரு தரப்பினரும் இங்கு கருத்துகளைப் பரிமாறிக் கொண்டுள்ளனர்.

தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையினால் மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அமெரிக்கத் தூதுவர் உள்ளிட்ட குழுவினருக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன்போது விளக்கமளித்துள்ளார்.

அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த தேர்தலை ஒத்திவைத்தல், மக்களை அடக்கி கொண்டுவர முயற்சி செய்து வரும் பல்வேறு சட்டங்கள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டுள்ளன.

இச்சந்திப்பில் அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் விவகார அதிகாரி மேத்யூ ஹின்சன் (Matthew Hinson), பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## முல்லை. நீதிபதி இராஜினாமா...

உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாக தான் வகித்து வந்த நீதிபதி பதவி மற்றும் பொறுப்புகள் அனைத்தையும் விட்டு விலகுவதாக தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா கடந்த மாதம் 23ஆம் திகதி நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு அறிவித்திருந்தார்.

இந்நிலையில், தனது பதவியை இராஜினாமா செய்வதாக கடந்த 28ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஊடகங்களுக்கு அறிவித்திருந்தார்.

இதன்போது, குருந்தூர் மலை வழக்கில் நீதிபதி வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு தொடர்ச்சியாக அரச தரப்பால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மற்றும் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்துக்கு வெளியிலும் தனக்கு அச்சுறுத்தல் விடுத்திருந்ததாகவும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே இதுகுறித்து விசாரணைகளை முன்னெடுக்குமாறு அமைச்சர் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளதுடன் தனக்கு உயிர் அச்சுறுத்த விடுக்கப்பட்டதாக நீதிபதி கூறிய விடயம் குறித்து பரந்துபட்ட விசாரணைகளை முன்னெடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார். விசாரணைகளைத் தொடர்ந்து, அதுதொடர் பான அறிக்கையை அமைச்சரிடம் சமர்ப்பிக்க வும் குற்றப்புலனாய்வு திணைக்களம் எதிர்ப்பார்த் துள்ளது.

## லிட்ரோ எரிவாயு விலை உயர்வு?...

நிறையுடைய சமையல் எரிவாயுவின் விலை 145 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய, தற்போது 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்று 3ஆயிரத்து 127 ரூபாவுக்கும் 05 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் ஆயிரத்து 256 ரூபாவுக்கும் 2.3 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்று 587 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மேலும், எரிவாயுவுக்கு தற்போது உலக சந்தையில் ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பை கருத்தில் கொண்டு இம்முறை இடம்பெறவுள்ள விலை மறுசீரமைப்பின் போது சமையல் எரிவாயுவின் விலை மேலும் அதிகரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## எரிபொருள் விலையேற்றம்...

வகையில் இந்த எரிபொருள் விலையேற்றத்தை அமுல்படுத்தியுள்ளன.

### சினோபெக்

இதேவேளை, சினோபெக் நிறுவனத்தின் விலை அதிகரிப்பின்படி, ஒக்டேன் 92 ரக பெற்றோலின் விலையில் எந்த மாற்றமும் செய்யவில்லை. அதற்கமைய, ஒரு லீற்றர் ஒக்டேன் 92 ரக பெற்றோலை 358 ரூபாவுக்கு விற்பனை செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது.

மேலும், ஒரு லீற்றர் ஒக்டேன் 95 ரக பெற்றோலின் விலை 06 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 420 ரூபா என்றும் ஒரு லீற்றர் ஓட்டோ டீசலின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 348 ரூபா எனவும் ஒரு லீற்றர் சுப்பர் டீசலின் விலை 61 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 417 ரூபா எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### சிபெட்கோ

ஒரு லீற்றர் ஒக்டேன் 92 ரக பெற்றோல் 04 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 365 ரூபா என சிபெட்கோ நிறுவனம் அறிவித்துள்ளது.

ஒரு லீற்றர் ஒக்டேன் 95 ரக பெற்றோல் 03 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 420 ரூபாவாகும்.

ஒரு லீற்றர் லங்கா ஓட்டோ டீசல் 10 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு, அதன் புதிய விலை 351 ரூபாவாகும்.

ஒரு லீற்றர் லங்கா சுப்பர் டீசலின் விலை 62 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு, அதன் புதிய விலை 421 ரூபாவாகும்.

மேலும், ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 11 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

### லங்கா ஐ.ஓ.சி.

இதேவேளை, நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் திருத்தப்பட்ட சிபெட்கோ விலைக்கு ஏற்ப தாங்களும் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளதாக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது.

# திடீரென தீப்பிடித்த முச்சக்கரவண்டி

### கம்பளை பகுதியில் சம்பவம்

கம்பளை வைத்தியசாலைக்கு அருகில் நேற்று முச்சக்கரவண்டியொன்று திடீரென தீப்பிடித்து முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

மில்லகஹமுல பிரதேசத்திலிருந்து கணவன், மனைவி மற்றும் பிள்ளைகள் நேற்று கம்பளைக்கு வருகை தந்துள்ளனர்.

இந்நிலையில், கம்பளை நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை நிரப்பிக்கொண்டு சுமார் 50 மீற்றர் முன்னோக்கிச் சென்ற போதே தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீயை அணைக்க அப்பகுதியில் கூடியிருந்தவர்கள் முயற்சித்தபோதும் முயற்சி பயனளிக்காது முச்சக்கரவண்டி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

கம்பளை பிரதேசத்தில் கடந்த சில மாதங்களுக்குள் மாத்திரம் சுமார் 05 முச்சக்கரவண்டிகள் தீக்கிரையாகியுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

# நாணய நிதியத்துடனான உடன்படிக்கையின் நிலைப்பாட்டில் எந்தவொரு மாற்றமுமில்லை

### பிரதான எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு

நாட்டில் கடந்த 2020ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடனான தொடர்பை விலக்கிக் கொண்டபோது, ஐக்கிய மக்கள் சக்தி அதை எதிர்த்தோடு சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்லுங்கள் என்று கூறியிருந்தது. இன்னும் அந்த நிலைப்பாட்டிலேயே தாம் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை காரணம் காட்டி மக்களையும் தொழிற்சங்கங்களையும் நாட்டையும் வஞ்சிக்கும் சகாப்தத்தை உருவாக்கி தங்கள் சொந்த முடிவுகளை ஒருவர் மீது ஒருவர் திணித்து போலியாக ஆட்சி செய்யும் சகாப்தம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரச நிறுவனங்களின் தொழிற்சங்கங்கள் ஒன்றியத்தை எதிர்க்கட்சித் தலைவர் குழுவுக்கு நேற்று (02) அழைத்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டிலுள்ள நிபுணர்கள் வெளியேறுவதை தடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒரு சிறந்த வேலைத்திட்டத்தை கொண்டுள்ளது. அரசாங்கத்தால் நிறைவேற்றிக்கொள்ளப்பட்ட ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் குறைபாடுகளில் ஒன்றான அரசியலமைப்பு பேரவை சரியாக வரையறுக்கப்படாததால் உறுப்பினர்களை நியமிப்பதில் அரசியலமைப்பு பேரவைக்கு தலையிடும் திறன் இல்லை. இது அரசாங்கத்தின் சதியா என்ற சந்தேகம் எழுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

## நீதித்துறையில் மேலாதிக்க...

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஏற்பட்டுள்ள இழுபறிகள், வங்குரோத்து நிலையை அடைந்துள்ள நிதி நிலைமைகளால் நாட்டின் மீது சர்வதேசத்தின் கவனம் குவிந்துள்ள சூழலிது. இவ்வாறுள்ள நிலையில், பொறுப்புக்கூறல் மற்றும் கடன் நிபந்தனைகளை நிறைவேற்றுவதிலும் சர்வதேசம் திருப்தியில்லை. பல்வகையான பொறிக்குள் நாடு உள்ளபோது அரசியல்வாதிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். சிறுபான்மை சமூகங்களின் அபிலாஷைகளுக்கு எதிரான செயற்பாடுகளை நிறுத்துவதனூடாகவே சர்வதேசத்தின் அபிமானத்தை வெல்ல முடியும்.

ஆணைக்குழுக்களை நிறுவுதல், அரசியலமைப்பில் திருத்தம் செய்தல் என்பவை கண்துடைப்புக்காகவா செய்யப்படுகிறது என்ற சந்தேகங்களைக் கிளறும் வகையிலே சிலரின் செயற்பாடுகள் உள்ளன. பாராளுமன்ற நிலையியற் கட்டளையையும் மீறி பாராளுமன்ற உறுப்பினர் சிலர் தெரிவித்த கருத்துகள், நீதித்துறையை பாரபட்சத்துக்குள் புகுத்துவதற்கான முயற்சியா? எனக் கேட்க விரும்புகின்றேன்.

அதிகார வர்க்கத்துக்குள் அல்லது பெரும்பான்மை விருப்புக்குள் நீதிமன்றங்களையோ அல்லது அரச நிர்வாகத்தையோ கொண்டுவர முயல்வது ஆரோக்கியமாக அமையாது. முல்லைத்தீவு நீதிபதிக்கு நடந்த கதிபோன்று எவருக்கும் நடைபெறக்கூடாது. அரசாங்கம் இதற்கு உத்தரவாதம் வழங்க வேண்டும்.

நிதி மற்றும் நீதித்துறைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காண சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது அவசியம். இல்லாவிடின் பாரிய நெருக்குதல்களுக்கு நாடு உள்ளாவதை தவிர்க்க முடியாது போகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாகன வரி அனுமதிப்...

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (02) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்,

"இந்நாட்டில் அரச சேவையின் வினைத்திறனை மேம்படுத்தவும் முறைகேடுகளைத் தடுக்கவும் அரச சேவை முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்பட வேண்டும். எனவே, இது தொடர்பில் அவதானம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட அறிக்கையின்போது அனைத்து அரச நிறுவனங்களும் டிஜிட்டல் மயமாக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள், மாநகர சபைகள், மாவட்டச் செயலகங்கள் உள்ளிட்ட ஒன்பது வகையான அரச நிறுவனங்களைத் தெரிவுசெய்து, அரச சேவையை டிஜிட்டல் மயமாக்கும் வகையில் ஒன்பது முன்னோடி வேலைத் திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

மேலும், எதிர்வரும் 07 ஆம் திகதிமுதல் ஒன்லைன் முறையில் (eRL 2.0) வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் பெறும் வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சங்கமும் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன.

மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய 08 மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் வழங்கும் செயல்முறைமையில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை அனைத்து அரச நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தி அடுத்த மாதம் மார்ச் மாதத்துக்குள் முழுமையாக ஒன்லைனில் கட்டணங்களை செலுத்தத் தேவையான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அடுத்த ஆண்டுக்குள் டிஜிட்டல் மயமாக்கல் மூலம் நாடு முழுவதும் அரச சேவையை வலுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வேலைத்திட்டத்தை அடைவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் Digi – Econ 2023-2030 வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு இணையாக தொழில்நுட்பக் கண்காட்சிகள், மாநாடுகள், டிஜிட்டல் துறையில் திறமைகளை வெளிப்படுத்திய இளைஞர், யுவதிகளை பாராட்டும் நிகழ்வுகள் போன்றன நடத்தப்படவுள்ளன. நாட்டில் புதிய திட்டங்களை ஆரம்பிப்பதற்கான டிஜிட்டல் முதலீட்டு மாநாடு ஒக்டோபர் 13ஆம் திகதி கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் நடைபெறவுள்ளது. இதில் நூற்றுக்கணக்கான முதலீட்டாளர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இது, நாட்டின் முதலீடுகளை வலுப்படுத்த உதவும். இந்த நாட்டில் டிஜிட்டல் பொருளாதாரத் திட்டத்தை உருவாக்குவதே இந்த Digi – Econ திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். டிஜிட்டல் பொருளாதாரத்தின் மூலம் குறுகிய காலத்தில் அந்நியச் செலாவணியை ஈட்ட முடியும் என்றும் இதன்மூலம் நாட்டின் பொருளாதாரம் வலுப்பெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது." என்று தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் மேலும் தெரிவித்தார்.

## மகாநாயக்கராக வேடம்...

மல்வத்து மகாநாயக்க தேரர் போன்று பாவனை செய்து, தொலைபேசி அழைப்புகள் மூலம் குறித்த நபர், பண மோசடியில் ஈடுபட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸ் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரேமலால் ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

51வயதுடைய சிறிமல் பிரியந்த என்பவரே இவ்வாறு கடந்த 28ஆம் திகதி கைதுசெய்யப்பட்டுள்ளார். காலி பிரதேசத்தைச் சேர்ந்த இவர், தற்போது பிலிமத்தலாவ பிரதேசத்தில் தற்காலிகமாக வசித்து வருகின்றார்.

மேற்படி சந்தேகநபர் தேசிய நாளிதழ்களில் வெளியான காணி, சொத்து விற்பனை விளம்பரங்கள் செய்துள்ள செல்வந்தர்களின் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற் படுத்தி மல்வத்து மகாநாயக்க தேரர் என்று தன்னை அறிமுகப்படுத்தி அவர்களுடன் நட்பை பேணி வந்துள்ளார்.

இவ்வாறாக தொடர்புகளைப் பேணி வந்த சந்தேகநபர், வேலைவாய்ப்புக்காகவும் உயர் கல்வியை தொடர்வதற்காகவும் ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகவும் குறிப்பாக அவுஸ்திரேலியாவுக்கு உடனடியாக அனுப்புவதற்கு ஒரு இலட்சம் ரூபா மாத்திரம் செலுத்தும்படியும் கூறி ஏமாற்றியுள்ளார்.

அதேநேரத்தில் குறித்த மோசடி சந்தேகநபர் வெளிநாடுகளுக்கு ஆட்களை பணிக்கு அனுப்புவதாக ஆசை வார்த்தை கூறி ஒரு இலட்சத்து 37ஆயிரம் ரூபாவை மோசடி செய்துள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நுவரெலியா, சந்ததென பகுதி வீடொன்றில் இருந்த குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரேமலால் ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர், நாடளாவிய ரீதியில் பல இலட்சம் ரூபா பண மோசடி செய்துள்ளமையும் சில சந்தர்ப்பங்களில் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் நடித்து தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளித்துள்ளமையும் சந்தேகநபர் உரியவர்களிடம் பணத்தை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டைகளையும் பெற்றுக் கொண்டு வந்துள்ளதுடன் அவர்களின் தேசிய அடையாள அட்டை நகல்களை கொடுத்து மற்றவர்களை ஏமாற்றுவதற்காக 100 முதல் 120 வரையான சிம் அட்டைகளையும் கொள்வனவு செய்துள்ளமை, போலி தேசிய அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி மோசடியாகப் பணம் பெற்றுக் கொண்டு சுமார் 15 வங்கிக் கணக்குகளைப் பராமரித்து வந்தமை, போலி தேசிய அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி பல திருமணங்கள் செய்துள்ளமை, திருமணம் செய்த பெண்களுடன் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்துள்ளமை என்பன தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸ் பரிசோதகர் பிரேமலால் ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

சந்தேகநபரை கைது செய்த பொலிஸார் 11 தொலைபேசிகள், ஒரு டெப் இயந்திரம், இணைய அணுகல் கருவிகள், வங்கிக் கணக்கில் பணம் செலுத்தியதற்கான ரசீதுகள், வெவ்வேறு பெயர்களில் செய்யப்பட்ட அதிகாரபூர்வ முத்திரைகள், தொலைபேசி எண்கள் எழுதப் பயன்படுத்தப்பட்ட பல புத்தகங்கள், விசாக்கள், பல்வேறு நபர்களின் பெயர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஏராளமான அறிமுக அட்டைகள் போன்றவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபரிடம் கைப்பற்றப்பட்ட போலி தேசிய அடையாள அட்டையில் உள்ள கிராமங்களின் பெயர்களின் பிரகாரம் மத்துகம, மஹர, பன்வில, கொழும்பு, கோட்டை, கேகாலை, தம்புள்ளை, நுவரெலியா, காலி பலப்பிட்டிய, அநுராதபுரம், நுகேகொடை, களுத்துறை, அளுத்கடை ஆகிய நீதிமன்றங்களில் பண மோசடி வழக்குகள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

ஆள்மாறாட்டம், போலி ஆவணங்கள் தயாரித்தல் உள்ளிட்ட பல குற்றங்கள் தொடர்பாக இவருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நுவரெலியா நீதவான் நீதிமன்றில் பொலிஸார் ஆஜர்படுத்தியபோது அவரை எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா பதில் நீதவான் கே.டி.விஜேவிக்ரம உத்தரவிட்டார்.

நுவரெலியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த ஹக்மன, நுவரெலியா தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரேமலால் ஹெட்டியாரச்சி ஆகியோரின் பணிப்புரையின் பிரகாரம் குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸ் பரிசோதகர் ராஜநாயக்க தலைமையில் இதுதொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## பிள்ளையான் தரப்பு...

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் ஆட்சியிலிருந்தபோதும், மைத்திரி பாதுகாப்பு அமைச்சராக இருந்த காலப்பகுதியிலும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுக்கு தொடர்ந்து பணம் வழங்கியுள்ளனர்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு பல மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டன. ஆனால் அந்த தொகை ஜனாதிபதிகளான மைத்ரிபால சிறிசேன மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரினால் குறைக்கப்பட்டன.

மைத்ரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த போது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி குறைக்கப்பட்டதோடு கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது அத் தொகை மேலும் குறைக்கப்பட்டது.

ஒரு காலத்தில் இந்த நிதி 03 மில்லியன் ரூபா முதல் 06 மில்லியன் ரூபா வரையில் பெற்றுக் கொடுக்கப்பட்டது. ஆனால் பின்னர் அந்த தொகை வெகுவாகக் குறைக்கப்பட்டது.

அப்போது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் பெயர் பட்டியல் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது. மேலும், மட்டக்களப்பில் 03 இடங்களில் பணம் செலுத்தப்பட்டது.

இந்த கொடுப்பனவுகளை சேகரித்து, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் கையளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

உண்மையான பட்டியலில் 15 பேர் மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்ததால், சில சந்தர்ப்பங்களில் அந்த அமைப்பு போலி பெயர்ப் பட்டியலை வழங்கியது. 40 பணியாளர்கள் என கணக்கு காட்டி அந்த பணம் வசூலிக்கப்பட்டு, மீதமுள்ள நிதித்தொகை சட்ட மற்றும் பிற நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

இந்தப் பட்டியலில் போலிப் பெயர்கள் சேர்க்கப்பட்டிருப்பது பாதுகாப்பு அதிகாரிகளுக்குத் தெரியாது. கொழும்பு மற்றும் ஜெனிவாவில் உள்ள இராஜதந்திர தூதரகங்களுக்கு அனுப்பப்பட்ட ஆவணத்தில் எனது குற்றச்சாட்டுகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்காக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு வழங்கிய ஆதரவுக்காக ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் உதவியது இரகசியமில்லை என்றும் கூறினார்.

## முல்லேரியா பெண் கொலை;

# பிரதான சந்தேக நபர் பொலிஸில் சரண்

முல்லேரியா பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டு, அவரது கை, கால்கள், தலைப்பகுதி துண்டிக்கப்பட்ட நிலையில் நிர்வாணமாக மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் நேற்று (02) பொலிஸில் சரணடைந்துள்ளார்.

வர்த்தகரான பிரதான சந்தேக நபர் தனது உறவினர் உதவியுடன் சப்புகஸ்கந்த பொலிஸில் சரணடைந்துள்ளார்.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபருக்கு உதவியதாக செயற்பட்ட ஒருவரும் நேற்று (02) பொலிஸில் சரணடைந்துள்ள நிலையில் பிரதான சந்தேகநபர் சியபலாம்பே தெற்கு பகுதியைச் சேர்ந்த 53 வயதுடையவராவார்.

சம்பவத்தின் இரண்டாவது சந்தேக நபர்,தேவாலய பூசகரான 48 வயதுடைய அதே பகுதியைச் சேர்ந்தவராவார்.

அத்தோடு கொலை செய்யப்பட்ட பெண்ணின் உடல் பாகங்களை வெட்டுவதற்கு இரண்டாவது சந்தேகநபர், பிரதான சந்தேக நபருக்கு உதவியாக இருந்ததாக மேலதிக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, சந்தேக நபர்கள் பொலிஸில் சரணடையும் சந்தர்ப்பத்தில் பெண்ணின் சடலத்தை ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்ட வாகனும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. சபுகஸ்கந்த பொலிஸார் சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விரைவில்

## லலித் எல்லாவல எம்.பி

நாட்டில் அதிகரித்துள்ள கொலைகளை கட்டுப்படுத்துவதற்கு தவறியுள்ள பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை அடுத்த வாரம் சபாநாயகருக்கு சமர்ப்பிப்பதற்கு களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல உட்பட மக்கள் சுதந்திர சபை தீர்மானித்துள்ளது.எதிர்க்கட்சி எம்.பி.க்களுடன் இன்று நடைபெறவுள்ள கலந்துரையாடலில் இது தொடர்பில் நீண்ட நேரம் ஆராயப்படும்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆளும் கட்சி உறுப்பினர்களும் ஆதரவளிக்கவுள்ளதாகவும் லலித் எல்லாவல தெரிவித்துள்ளார்.நாட்டில் நிலவும் கொலைகளை கட்டுப்படுத்த பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் தமது குழுவினருக்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கியுள்ளதாகவும் காலம் கடந்தும் குற்றச் செயல்கள் குறையவில்லை என எம்.பி மேலும் குறிப்பிட்டுள்ளார்.இதன் காரணமாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகரிடம் விரைவில் கையளிக்கப்படும் எனவும் அதற்கு போதுமான ஆதாரங்கள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# அரசியல்வாதிகள் தொடர்பில் பிள்ளைகளுக்கு எடுத்துரைக்க வேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



இந்நாட்டு அரசியல்வாதிகள் தொடர்பில் பெரியவர்களுக்கு நன்கு தெரிந்தாலும் பிள்ளைகளுக்கு எடுத்துரைக்க வேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் குறைபாடுகள் ஏற்படும் போது பொறுப்பான அதிகாரிகளிடம் கேட்டால் நாட்டில் பணம் இல்லை என கூறினாலும் அடிக்கடி வெளிநாடுகளுக்கு பயணம் செய்கின்றார்கள் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத் திட்டத்தின் 34 ஆவது கட்டமாக கெஸ்பேவ வித்யாலோக மகா வித்தியாலயத்துக்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (01) இடம்பெற்றது.இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

வெளிநாட்டுப் பயணங்களுக்கு தனது அரசியல் நண்பர்களை அழைத்துச் செல்லும் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தில் உயர் பதவிகளில் இருப்பவர்களைப் பற்றி பாடசாலை மாணவர்களும் அறிந்திருக்க வேண்டும். அரசியல் பேசக்கூடாது என்று சொல்லி, குழந்தைகளிடம் கூட திருட்டை, மோசடியை,ஊழலை மறைக் கிறார்கள். இந்த தகவலை மறைக்கும் அரசியல் கட்டமைப்பில் நாடு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

நாட்டில் தீராத பிரச்சினைகள் நிலவும் போது அரசியல் ஆதாயத்துக்காக எம்.பிக்களை வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்வது பெரும் துரோகத்தனமாகும். இந்நிலையில் 3 ஆவது முறையாக மின் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் தயாராகியுள்ளது.

ஐ.எம்.எப். உடன்படிக்கையின் நிபந்தனைகளைக்கூட அவர்கள் இன்னும் மக்களிடம் முன்வைக்க வில்லை. இவை அனைத்துக்கும் அரசாங் கத்திடம் இருந்து உரிய பதில் தேவை என்றும் தெரிவித்தார்.

# பணிப்பெண் ராஜகுமாரி உயிரிழந்த சம்பவம்: பொலிஸார் நால்வருக்கும் தொடர்ந்து விளக்கமறியல்

கைதுசெய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் வீட்டுப் பணிப்பெண் ஆர்.ராஜகுமாரி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட வெலிக்கடை பொலிஸில் கடமையாற்றும் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குணுவெல உத்தரவிட்டுள்ளார்.

பதுளையைச் சேர்ந்த 41 வயதான ஆர். ராஜகுமாரி, தமக்குச் சொந்தமான தங்க நகைகளைத் திருடிச் சென்றதாகக் கூறி, அவரது முதலாளியான பிரபல தயாரிப்பாளரான சுதர்மா நெத்திகுமார செய்த முறைப்பாட்டின் அடிப்படையில், கடந்த மே 11 ஆம் திகதி அன்று ராஜகுமாரி கைது செய்யப்பட்டார்.

பின்னர் வெலிக்கடை பொலிஸாரின் காவலில் இருந்தபோதே அவர் உயிரிழந்துள்ளார். எனினும், அவர் தாக்கப்பட்டதாக அவரது உறவினர்கள் சந்தேகம் எழுப்பினர்.

இந்நிலையில் ஒகஸ்ட் 25ஆம் திகதி, குறித்த பெண்ணின் மரணத்துடன் தொடர்புடைய மேலதிக சந்தேகநபர்களை கைது செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குணுவல குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

நீதித்துறை மருத்துவ அதிகாரி சமர்ப்பித்த பிரேத பரிசோதனை அறிக்கையில் ஆதாரங்களை கவனமாக ஆய்வு செய்த பின்னர் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி, மரணத்துக்கான காரணம் மழுங்கிய ஆயுதம் அல்லது அதேபோன்ற ஆயுதம் ஒன்றினால் தாக்கப்பட்ட பின்னர் இறந்தவரின் தசைகளில் ஏற்பட்ட சேதத்தால் ஏற்பட்ட இரத்தக்கசிவால் அவர் உயிரிழந்ததாக தீர்ப்பளிக்கப்பட்டது.

இதன்படி, சம்பவம் இடம்பெற்ற போது வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய உப பொலிஸ் பரிசோதகர் உட்பட நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களை ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று (02) உத்தரவிடப்பட்டுள்ளது.

# திருகோணமலையில் திலீபனின் ஊர்திப் பவனி தாக்குதல்;

## எமது உறுப்பினர்கள் மீது பொய்யான வழக்குத் தாக்கல்

தியாக தீபம் திலீபனின் ஊர்திப் பவனியின்போது திருகோணமலையில் காடையர்களை வைத்து தாக்கிவிட்டு எமது உறுப்பினர்கள் தங்களை அச்சுறுத்தியதாக கூறி பொய்யான வழக்கு தாக்கல் செய்திருக்கின்றார்கள் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

குறித்த வழக்கு தொடர்பில் வவுனியா நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,அந்த வழக்கில் நாங்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி, நீதிமன்றத்துக்கு உண்மைகளை எடுத்துக்கூறி, அப்பாவிகளான சந்தேகநபர்களை பிணையில் விடுவித்திருக்கின்றோம்.

அரச இயந்திரத்தினதும் பொலிஸாரினதும் சர்வாதிகாரம் எல்லை தாண்டி சென்று கொண்டிருக்கிறது. நீதிபதிகளை நாட்டை விட்டு விரட்டுகின்றார்கள்.

ஜனநாயக முறை யில் போராடுகின்ற அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வர்கள் மீது பொய்யான வழக்குகளை தாக்கல் செய்து கைது செய்கின்றார்கள்.

இவை அனைத்தும் இந்த நாட்டின் நிர்வாக மானது அராஜகப் போக்கில் செல்கின்றது என்பதையே எடுத்துக் காட்டுகிறது என்றார்.



கிழக்கு மாகாணக் கல்விப் பணிப் பாளராக சுஜாதா குலேந்திரகுமார் தனது கடமைகளை கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் நேற்று திங்கட்கிழமை(02) பொறுப்பேற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யூ.ஜீ. திசா நாயக்க உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். (மீனோடைக்கட்டு செய்தியாளர்)

# பாணந்துறை புகையிரத நிலையத்தில் மோதல்

## சந்தேகநபர்கள் இருவர் கைது

புகையிரத பயணச்சீட்டை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட கருத்து முரண்பாடு வலுவடைந்ததில் பாணந்துறை புகையிரத நிலையத்தின் உப புகையிரத நிலைய பொறுப்பதிகாரி மற்றும் புகையிரத நிலைய பணியாளரையும் தாக்கியதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள தந்தையும் மகனும் நேற்று (02) கைதுசெய்யப்பட்டுள்ளதாக பாணந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்கப்பட்ட உப புகையிரத நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பணியாளர் ஆகிய இருவரும் சிகிச்சைக்காக பாணந் துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். இம்மோதல் சம்பவத்தினால் பிரயாணச்சீட்டை இரத்துச் செய்யும் இயந்திரமும் செயலிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபரான இளைஞர் நேற்றுக் காலை 09.30 மணியளவில் பாணந்துறை புகையிரத நிலையத்துக்கு அவசரமாக வந்துள்ளதுடன் கொழும்பு நோக்கி பயணிக்கும் புகையிரதம் எத்தனை மணிக்கு புறப்படும் என்று அங்கிருந்தவரிடம் கேட்டுள்ளார்.

அவர் பிரயாணச் சீட்டு பிரிவில் பிரயாண அட்டையை பெற்றுகொண்டு வந்ததும் புகையிரதம் அங்கிருந்து புறப்பட்டுள்ளதுடன் அதன் பின்னர் அவர் புகையிரத பணியாளருடன் முரண்பட்டு அவரை தாக்கியுள்ளதுடன் அத்துடன் பணியாளர்கள் இருவரை தாக்க முயற்சித்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் காயங்களுக்குள்ளான குறித்த நபர் தொலைபேசி அழைப்பினூடாக சிலரை புகையிரத நிலையத்துக்கு அழைத்து உப புகையிரத நிலைய பொறுப்பதிகாரியையும் பணியாளர் ஒருவரையும் தாக்கியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து அவ்விடத்துக்குச் சென்ற பாணந்துறை தெற்கு பொலிஸ் அதிகாரிகள் இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் தந்தை மகன் இருவரையும் கைதுசெய்ததுடன் அவரை பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் முதலாம் இலக்க வார்ட்டில் அனுமதிக்கவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சந்தேகநபர்களான தந்தையும் மகனும் பாணந்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு அழைப்பாணை

தேர்தல் ஆணைக்குழுவின் புதிய தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கு மீண்டும் அழைப்பாணை விடுக்க நடவடிக்கை எடுக்குமாறு உயர் நீதிமன்றம் நேற்று (02) உத்தரவிட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 09 ஆம் திகதி இடம்பெறவிருந்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்தனூடாக மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பு பெற்றுக்கொடுக்குமாறும் அந்த தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிடுமாறும் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமைகள் மனுவின் பிரதிவாதிகளாக தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.




இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகமும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வெளியிட்ட சு.முரளிதரன் தமிழில் மொழிபெயர்த்த ரொட்ணி விதானபத்திரனவின் லண்டன் வெம்மை என்ற நாவல் வெளியிட்டு விழா ஞாயிற்றுக்கிழமை காலை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பூபாலசிங்கம் புத்தகசாலையின் விற்பனைக்கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது நாவலின் முதற்பிரதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் இலக்கியப் புரவலர் ஹாஷிம் உமர் கல்வி அமைச்சின் வெளியீட்டு திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் நாயகமும் நூலின் மொழிபெயர்ப்பாளருமான சு.முரளிதரன், நூலாசியர் ரொட்ணி விதானபத்திரன் ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொண்டார். ஸ்ரீதரசிங் பூபாலசிங்கம், கவிஞர் மேமன் கவி ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.







சீரடி சாயி பாபா ஜனன தின விழா கொழும்பு-13, புதுச்செட்டித் தெரு சீரடி சாய்பாபா ஆலயத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நீதியரசர் பி.குமார் இரட்னம் கலந்துகொண்டார். இதன்போது, ஆலய பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன், நீதியரசர் சகிதம் பிறந்த நாள் கேக் வெட்டுவதையும் சாயி நிலைய உபதலைவர் சிவா இராஜஜோதி, ஆர். நாராயணசாமி நாயிடு, எஸ். மாணிக்கம் ஆகியோரையும் காணலாம்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 16ஆம் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்:** தேவையான பணம் கையிருப்பில் இருந்தாலும் செலவுகளுக்கு குறையிருக்காது. வீண் கேலிப் பேச்சுக்களை தவிருங்கள்.

**ரிஷபம்:** பிரச்சினை இன்றியே மனதைப் போட்டுக் குழப்பிக்கொள்வீர்கள். அவசியச் செலவுகளை நிச்சயம் செய்ய வேண்டிய நாள்.

**மிதுனம்:** ஏதோ ஒரு மனக்குறையோடு உலாவிக்கொண்டிருப்பீர்கள். உங்கள் பொருட்களைப் பத்திரப் படுத்திக் கொள்ளுங்கள்.

**கடகம்:** நண்பர்கள் மூலம் நீங்கள் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செலவுகளையும். பயணங்களையும் குறைத்துக் கொள்ளுங்கள்.

**சிம்மம்:** வெளியிடத்தவர்களின் பூரண அன்பும் அரவணைப்பும் நிறைந்த நாள். மனைவி மக்களோடு குதூகலித்திருப்பீர்கள்.

**கன்னி:** பெரியோர்களின் கோபத்துக்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்ளுங்கள். தொழில் வியாபாரத்தில் அக்கறை காட்டுங்கள்.

**துலாம்:** வீண்பழிகள் உங்கள் மீது சுமத்தப்படலாம். சற்று கஷ்டப்பட்டு உழைத்தாலேயன்றி பணம் கிடைப்பது அரிது.

**விருச்சிகம்:** பெண்களால் எதிர்பாராத சில செலவுகள். சிக்கல்கள் ஏற்படலாம். எதற்கும் முந்திக் கொண்டு வாய் வார்த்தைகளை விடாதீர்கள்.

**தனுசு:** பண ரீதியில் இருந்து வந்த சிக்கல்களை இன்று சமாளிப்பீர்கள். காதல் விவகாரங்களை சற்று கவனமாக கையாளுங்கள்.

**மகரம்:** நீண்ட நாள் பகைவர்கள் மன்னிப்புக்கோரி கரம் சேர்த்துக் கொள்வார்கள்.மனதை கட்டுப் பாட்டுக்குள் வைத்துக்கொள்க.

**கும்பம்:** ஏதாவது வீண் வம்பு வழக்குகளில் மாட்டிக்கொள்ளாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பயணத் தடை உண்டு.

**மீனம்:** இன்ப அனுபவங்களால் திளைத்திருப்பீர்கள். யாரையும் நம்புவதற்கு முன்னர் ஒன்றுக்கு நான்கு முறை சிந்திக்கவும்.

**திதி:** சதுர்த்தி மு.ப.6.12 வரை பின் பஞ்சமி
**நட்சத்திரம்:** கார்த்திகை பி.ப.6.03 வரை பின் ரோஹிணி
**யோகம்:** மரண யோகம் பி.ப.6.03 வரை பின் அமிர்த யோகம்
**வார சூலை:** வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:** மு.ப. 7.58 – 8.58 மணி வரை
**ராகு காலம்:** 2.58 – 4.28 மணி வரை
**எமகண்டம்:** 8.58 – 10.28 மணி வரை
**குளிகை:** 11.58 – 1.28 மணி வரை
**சந்திராஷ்டமம்:** துலாம் ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தன அதிஷ்டம்:** பரணி,பூரம்,பூராடம் (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்:** -------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325, 078-6759739


## வாகனங்கள் விற்பனைக்கு விலைமனுக்கோரல்

| வாகன இலக்கம் | செசி இலக்கம் | தயாரிப்பு வகை | |
|---|---|---|---|
| WP-CAX - 1XXX | MH55S-160709 | MOTOR CAR | SUZUKI WAGON R FX |
| 15 - 8XXX | AT1504072051 | MOTOR CAR | TOYOTA CARINA -AT150 |
| NC-HD - 9XXX | MAT38508139R09946 | MOTOR CAR | TATA SUMO |
| 52 - 7XXX | LH66V0000110 | DUAL P. VEHICLE | TOYOTA HIACE |
| 53 - 0XXX | CJNK140NP01094 | DUAL P. VEHICLE | MITSUBISHI L200 |
| SG-LC - 8XXX | MAT4450106RR60316 | MOTOR LORRY | TATA ACE |
| WP-LD - 1XXX | MAT4450106RR62013 | MOTOR LORRY | TATA ACE |
| SG-DAA - 6XXX | MA1FA2HRRF6C24567 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO PLUS VX |
| SP-PT - 6XXX | MAT491006CJR06494 | MINI TRUCK | TATA ACE ZIP |
| NP-PT - 2XXX | MAT445051BVR78579 | MINI TRUCK | TATA ACE |
| SP-PV - 0XXX | MA1FA2HRRD6A22337 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| SG-PT - 1XXX | MA1FA2HRRC6C24682 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| NC-PS - 6XXX | MA1FA2HRRC6A14587 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| WP-PT - 9XXX | MA1FA2HRRC6H20775 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| SP-PY - 0XXX | LVAV1JAB5DE386133 | MINI TRUCK | FOTON BJ1010V0JA32 |
| SP-DAC - 0XXX | MAT483149FYR10180 | MINI TRUCK | TATA SUPPER ACE |
| SP-PT - 4XXX | MAT491006CJR05923 | MINI TRUCK | TATA ACE ZIP |
| SP-PW - 5XXX | MA1FA2HRRD6G23693 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO PLUS |

| | |
|---|---|
| • வாகனம் பரிசோதனை செய்தல் | : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல். |
| • வாகனம் பரிசோதனை செய்யும் கால எல்லை | : 2023 ஒக்டொபர் 04, 05ஆம் திகதிகளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை. ஒக்டொபர் 06ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மட்டும். |
| • டெண்டர் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி | : 2023 ஒக்டொபர் 06ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை. |
| • டெண்டர் பத்திரத்தின் விலை | : ரூபா.250/- (மீளப்பெற முடியாது) |
| • டெண்டர் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி | : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல். |
| • டெண்டர் பெட்டி வைக்கப்பட்டுள்ள, டெண்டர் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி | : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல். |

டெண்டர் பத்திரங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கையளிக்க முடியும். தபால் மூலம் அனுப்பும் டெண்டர் பத்திர கடித உறையின் முன் பக்க இடது புற மேல் மூலையில் "வாகன விற்பனை" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேற் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் தற்போதுள்ள நிலையில் பெற்றுக்கொடுப்பதுடன், டெண்டர் கோருவதற்கு முன் அகற்றும் உரிமை நிறுவன வசமானதாகும்.

முகாமையாளர்,
**கொமர்ஷல் கிரெடிட் அண்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.**
வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
தொலைபேசி இல. 0112 000 000
COMMERCIAL CREDIT

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஒக்டோபர் 03ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# ஐ.எம்.எவ். சொல்வதும் யதார்த்த நிலையும்!

வருமானத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியால் நாட்டு மக்கள் மத்தியில் கடுமையான சமூக அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தால் வெளியிடப்பட்டுள்ள 2023, செப்டெம்பர் பொது நிர்வாக பகுப்பாய்வு மதிப்பீட்டு அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணவீக்கத்தை மட்டுப்படுத்துதல், நாணய மாற்று விகிதங்களை ஸ்திரப்படுத்துதல், இலங்கை மத்திய வங்கியின் இருப்புகளை மீளக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றுடன் பொருளாதார ஸ்திரப்படுத்தலில் தற்காலிக முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், இந்த நிலை உருவாகியுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிசக்தித் துறையில் வரித் திருத்தங்கள், செலவை ஈடுசெய்வதற்காக முன்வைக்கப்பட்ட விலை நிர்ணயம், நிலுவைத் தொகை நெருக்கடியைத் தீர்க்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்பன வாழ்க்கைச் செலவை உயர்த்தியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களின் தொடர்ச்சியான தட்டுப்பாடு, போராட்டக்காரர்களுக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகள் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டமை பொதுமக்களின் அதிருப்திக்கு வழிவகுத்துள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊழலைக் குறைப்பதில் தெளிவான முன்னேற்றம் இல்லாமையும் பொதுமக்களிடையே அதிருப்தி ஏற்பட முக்கிய காரணியென சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

கடந்த கால முறைகேடுகளுக்குக் காரணமான அதிகாரிகள் அதற்குரிய தண்டனையை அனுபவிக்காமல், தத்தமது பதவிகளில் தொடர்ந்தும் நீடிக்கின்றமையும் பொதுமக்கள் கவனம் செலுத்தியுள்ள விடயமாக அமைந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தனது அறிக்கையில் கூறியுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு உள்ளிட்ட பலவீனமான பொறுப்புக்கூறல் நிறுவனங்களால் ஊழல் அபாயங்கள் உக்கிரமடைந்துள்ளதாகவும் இதனால் இந்த நிறுவனங்களுக்கு தங்களது பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றும் அதிகாரமோ, தகுதியோ இல்லை எனவும் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தவறான நடத்தையைக்கொண்ட அதிகாரிகளை தண்டிக்கா ததால், பொது நிர்வாகத்துறை மீதான நம்பிக்கை குறைமதிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மேலும், அரச கொள்முதல் நடவடிக்கைகளில் ஊழல் இடம்பெறும் அபாயம் காணப்படுகின்றமை, கொள்முதல் செயற்பாடுகளுக்கான விநியோகஸ்தர்களை தெரிவுசெய்வதில் அதிக அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றமை என்பன பொதுமக்களின் விரக்திக்கான காரணங்களாக அமைந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் புதிய அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இந்த அறிக்கை மிகவும் கவனத்திற்கொள்ளப்படவேண்டிய ஒன்றாக இருக்கிறது. ஒருபக்கம் மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்ந்துவிட்டதாகக் கருதி கவலை தெரிவிக்கும் சர்வதேச நாணய நிதியம், இன்னொருபக்கம் வரியை அதிகரித்து தனது கடன் நிபந்தனைகளை இலங்கை நிறைவேற்றவில்லையே என்று கவலைப்படுவது முரணாக இருக்கிறது.

இலங்கை மக்களின் மன அழுத்தத்துக்கான காரணத்தின் அடிப்படையே பொருளாதார நெருக்கடி என்பது இரகசியமல்ல. சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்குவதற்காக முன்வைத்த நூற்றுக்கும் மேற்பட்ட நிபந்தனைகளில் கிட்டத்தட்ட சரிபாதியான நிபந்தனைகளை இலங்கை நிறைவேற்றியுள்ளது. மேலும் பல நிபந்தனைகளை நிறைவேற்றும் வகையில் எரிபொருள் விலைகளை உயர்த்தியுள்ள அரசாங்கம் அடுத்தகட்டமாக மின்கட்டணம், சமையல் எரிவாயு என்பவற்றின் விலைகளை அதிகரிக்க தீர்மானித்திருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி முற்றிலும் புதியதொரு யுகத்துக்குள் பிரவேசிப்பதற்கான ஓர் அரிய வாய்ப்பை இலங்கைக்கு வழங்குகின்றது என்பதுபோன்று மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதற்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் கடந்த காலங்களில் முயற்சித்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

கடன் மறுசீரமைப்பு மாத்திரமல்ல, நாட்டின் எதிர்காலமே நாணய நிதியத்துடனான உடன்பாட்டை முழுமையாக நடைமுறைப்படுத்துவதிலேயே தங்கியிருக்கிறது என்று கூறிய விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை இந்த உடன்பாட்டைக் கைவிட்டால் இலங்கைக்கு மீட்சி இல்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்டவராக இருந்தார். ஆனால், இன்று அந்த நிபந்தனைகளால் வரும் எதிர்வினைகளை மக்களே அனுபவிக்கவேண்டியதாக இருக்கிறது. அதிலும் கொடுமை என்னவென்றால் இலங்கையர்கள் மன அழுத்தத்தில் இருப்பதாக சர்வதேச நாணய நிதியமே சொல்வது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் அனைத்தும் இலங்கை அரசால் நிறைவேற்றப்படும்போது நாட்டு மக்கள் குற்றுயிராக இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# மருத்துவர்களும் மறந்த கொலஸ்ட்ரோல்

டாக்டர் கு.முத்துச்செல்லக்குமார்

அண்மைக்காலமாக பிரபலங்கள் பலர் மாரடைப்பால் திடீரென இறந்துவிடுகிறார்கள். இளம் வயதினர், மருத்துவர்கள்கூட 30-40 வயதுகளில் மாரடைப்பால் திடீரென இறக்கிறார்கள். தினமும் வந்தடையும் இத்தகைய மாரடைப்புச் செய்திகள், மக்கள் மத்தியில் ஒருவித அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.




மாரடைப்பால் இறப்பவர்களுக்கு எந்த நோயும், கெட்ட பழக்கமும் இல்லையே என்று சிலர் ஆச்சரியப்படுகிறார்கள். இன்னும் சிலர், கொவிட் தடுப்பூசி போட்டதன் விளைவு என்று புரளியை வேறு கிளப்பிவிட்டிருக்கிறார்கள். இம்மாதிரியான ஊகங்களில் உண்மை இல்லை என்பது சமீபத்தில் நடத்திய ஆராய்ச்சிகளில் தெரியவந்துள்ளது.

**இளம் வயதினருக்கு மாரடைப்பு ஏன்?**

'இதயம் சார்ந்த திடீர் இறப்புகள்' (Sudden Cardiac Death) ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. மரபணு / பிறவி இதயக் கோளாறுகள், இதயத்தசை பிரச்சினைகள், சீரில்லாத இதயத்துடிப்பை உண்டாக்கும் நோய்கள், பிறவி இதயத் தமனி நோய்கள் / இதயத் தமனிச் சுருக்க - அடைப்பு நோய்கள், இதய வால்வு நோய்கள், நுரையீரல் இரத்தநாள அடைப்பு பாதிப்பு, தாங்க முடியாத திடீர் மன அழுத்தம் ஆகியவை மாரடைப்பு ஏற்படுவதற்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றன.

கொலஸ்ட்ரோல் பரிசோதனை என்றால், உடலிலுள்ள மொத்த கொலஸ்ட்ரோல் அளவை மட்டுமே பரிசோதனை செய்ய மருத்துவர்கள் பரிந்துரைப்பார்கள்.

அதன் பின்னர் நல்ல கொலஸ்ட்ரோல் (HDL), கெட்ட கொலஸ்ட்ரோல் (LDL) என்று ஆரம்பித்து விஎல்டிஎல், டிரைகிளிசரைட், அபோலிபோ புரோட்டீன் வரை பரிசோதனை செய்யத் தொடங்கினோம்.

இந்தப் பரிசோதனைகளில் பிரச்சினை என்னவென்றால், லிபோபுரோட்டீன் (a) கொலஸ்ட்ரோலை மட்டும் மருத்துவர்களே பரிசோதனைக்கு அவ்வளவாகப் பரிந்துரைப்பது கிடையாது. இதனால், நோயாளிகளுக்கும் இது குறித்து தெரிவதில்லை.

லிபோபுரோட்டீன் (a) என்பதைச் சுருக்கமாக Lp(a) என்று அழைப்பார்கள். இவை மரபணுரீதியாக நமக்குக் கடத்தப்படுகின்றன. லிபோபுரோட்டீன் (a) கொலஸ்ட்ரோல் என்பது எல்டிஎல் (LDL) கொலஸ்ட்ரோல் போலவே கெட்ட கொலஸ்ட்ரோல் ஆகும். இவை கல்லீரலில் உருவாகின்றன.

**லிபோபுரோட்டீன் பரிசோதனை ஏன் அவசியம்?**

ஆர்தர் ஆஷ் என்கிற சிறந்த டென்னிஸ் வீரருக்கு 36 வயதிலேயே மாரடைப்பு ஏற்பட்டது. ஆர்தர் நல்ல உடல் ஆரோக்கியத்தைப் பராமரிப்பதுடன், முறையான உடற்பயிற்சிகளையும் செய்பவர். எந்த நோய்க்கும் ஆளாகாமல் இருந்தபோதுதான் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. இதற்கான காரணத்தை ஆராய்ச்சி செய்ததில் அவருக்கு லிபோபுரோட்டீன் (a) கொலஸ்ட்ரோல் அதிகமாக இருந்ததே காரணம் எனக் கண்டறியப்பட்டது.

இளம் வயதினருக்கு இந்த கொலஸ்ட்ரோல் அளவுக்கு அதிகமாக இருந்தால் மாரடைப்பு ஏற்பட்டு மரணமடைகிறார்கள் என்று ஆய்வு முடிவுகள் கூறுகின்றன.

லிபோபுரோட்டீன் (a) கொலஸ்ட்ரோல் அதிகமாக இருப்பவர்களுக்கு, மற்றவர்களைவிட மாரடைப்பு ஏற்படுவதற்கு 2 முதல் 4 மடங்கு சாத்தியம் அதிகமாக உள்ளது.

எரியும் எண்ணெயில் நெய்யை ஊற்றியதுபோல், நாம் ஏற்கனவே நீரிழிவு தொடங்கி பல்வேறு இணை நோய்களைக்கொண்டு, தொற்றா நோய்களுக்கு இருப்பிடமாகியுள்ளோம். இதற்கிடையில் இதய நோய்க்கான காரணிகளையும் அதிகமாகக் கொண்டிருக்கிறோம்.

**லிபோபுரோட்டீன் (a) கொலஸ்ட்ரோல் அதிகரிப்பது எதனால்?**

இந்த கொலஸ்ட்ரோலின் அளவு மரபணுவை அடிப்படையாகக் கொண்டு மாறுபடும். அதாவது, நமது உடலிலுள்ள சில மரபணுக்கள் இதன் அளவை தீர்மானிக்கின்றன. ஜப்பான், சீனா ஆகிய நாட்டு மக்களின் இரத்தத்தில் லிபோபுரோட்டீன் (a) அளவு குறைவாக இருக்கிறது.




ஆபிரிக்க இன மக்களின் இரத்தத்தில் இது அதிகமாக இருக்கிறது. மரபணுவால் இரத்தத்தில் அதிகளவுள்ள இந்த கொலஸ்ட்ரோல் வாழ்நாள் முழுவதும் மாறாது.

ஆனால், மரபணு காரணமில்லாமல் வேறு பல உடல் நோய்களால் இதன் அளவு அதிகரிக்கலாம். நாட்பட்ட சிறுநீரக நோய் (CKD), நெஃப்ரோடிக் சிறுநீரக நோய், ஹைபோ தைராய்டிசம் ஆகிய நோய்களிலும் இதன் அளவு அதிகரிக்கும்.

**லிபோபுரோட்டீன் (a) கொலஸ்ட்ரோல் எப்படி வில்லனாகிறது?**

இந்த கொலஸ்ட்ரோல், இரத்த நாளத்தின் உட்புறத்தில் பிற எல்.டி.எல். கொலஸ்ட்ரோலைவிட அதிகமாகவும் எளிதிலும் ஒட்டும்தன்மையும் கொண்டவை. எனவே, எல்.டி.எல். கொலஸ்ட்ரோலைவிட இவை அதிக ஆபத்தானவையாக் கருதப்படுகிறது.

இவை இதய இரத்தநாள உட்சுவர்களைப் பாதிக்கும். இதனால், அடைப்பு ஏற்பட்டு, மாரடைப்பு ஏற்படும் ஆபத்துள்ளது. இவை மூளை பாதிப்பையும் இதயச் செயலிழப்பையும் ஏற்படுத்தும். இரத்த உறைவுத்தன்மையையும் ஏற்படுத்தும்.

இரத்தத்தில் இதன் அளவு 50 மிகி/டெ.லி அளவுக்கும், அதற்கு மேலாகவும் உயரும்போது, அது இதய நோய்க்கான ஆபத்தை அதிகரிக்கும். இதன் அளவு 14 மிகி/டெ.லி அளவுக்கும் குறைவாக இருந்தால் இதயம் பாதுகாக்கப்படும். 14-30 மிகி/டெ.லி வரை இருந்தால் இதய பாதிப்பு ஏற்பட சிறிதளவு வாய்ப்புள்ளது.

**ஆய்வுகூடப் பரிசோதனைகள்:**

இரத்தத்தில் இப்பரிசோதனை செய்வதற்குக் குறைந்தது எட்டு மணி நேரத்துக்கு முன்பாக உணவு, பிற பானங்கள் அருந்துவதைத் தவிர்க்க வேண்டும். லிபோபுரோட்டின் (a) கொலஸ்ட்ரோராலுடன், உடலிலுள்ள அனைத்து கொலஸ்ட்ரோல் வகைகளின் அளவுகளையும் கணக்கிட வேண்டும்.

மேலும், பொதுவான இரத்தப் பரிசோதனைகள், இரத்த சர்க்கரை அளவுகள், சிறுநீரகச் செயற்பாட்டை அறிய உதவும் பரிசோதனைகள், தைரோய்ட் பரிசோதனைகளைச் செய்துகொள்ள வேண்டும்.

**சிகிச்சை முறைகள்?**

இதயத்தைப் பாதித்து மாரடைப்பை ஏற்படுத்தும் அனைத்துக் காரணங்களையும் கண்டறிந்து அவற்றுக்கு முறையாக சிகிச்சை செய்வது முக்கியமானதாகும்.

கல்லீரல் சுரக்கும் பிசிஎஸ்கே9 நொதியின் (PCSK9 inhibitors) செயற்பாட்டைத் தடுக்கும் மருந்துகளைக்கொண்ட சிகிச்சைகள், லிபோபு ரோட்டீன் அபெரிசிஸ் (Lipoprotein Apheresis) ஆகியவை தற்சமயம் முயற்சியிலுள்ளன.

மரபணு சிகிச்சை முறைகள் (Gene Silencing techniques) ஆராய்ச்சி நிலையில் இருக்கின்றன.

**எப்படித் தடுக்கலாம்?**

லிபோபுரோட்டீன் (a) கொலஸ்ட்ரோல் அளவுகள் மரபணுவுடன் தொடர்புடையவை என்பதால், அதன் அளவைக் குறைப்பதற்கு உணவு முறையில் மாற்றம், உடற்பயிற்சி செய்தல் ஆகியவை பயன்படாது. இருப்பினும், மாரடைப்பு அபாயத்தைக் குறைக்கும் வழிகளில் கவனம் செலுத்தலாம்.

சிலருக்கு நாட்பட்ட சிறுநீரக நோய், நெஃப்ரோடிக் சிறுநீரக நோய், ஹைபோதைரோய்டிசம் நோய்களினாலும் இவை அதிகரிக்கும் என்பதால் அவற்றுக்கு முறையாக சிகிச்சை செய்வது அவசியமாகும்.

அதிக எடை, உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, கெடுதல் செய்யும் கொழுப்புள்ள உணவுகள், புகைபிடித்தல், மது அருந்துதல், மனச்சோர்வு, உறக்கமின்மை ஆகியவை மாரடைப்புக்கு எளிதில் வழிவகுக்கும் என்பதால் அவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, தைரோய்ட் குறைபாடு ஆகிய பாதிப்புகளையும் முறையாக சிகிச்சைசெய்து கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். வாரத்துக்கு ஐந்து முறையாவது உடற்பயிற்சி செய்யவேண்டும். உடலுக்கு உகந்த சமச்சீர் உணவுகளை உட்கொள்ள வேண்டும். பழங்கள், பச்சைக் காய்கறிகள், நார்ச்சத்து மிகுந்த தானிய உணவுகளை அன்றாடம் உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். மீன் உணவுகளும் (சால்மன், மத்தி, கானாங்கெளுத்தி போன்றவை) இவர்களுக்குச் சிறந்தது.

புகைபிடித்தல், மது அருந்துதல் ஆகிய பழக்கங்களைக் கைவிட வேண்டும். அதிக உணர்ச்சிவசப்படாமல் நிதானத்தைக் கையாளக் கற்றுக்கொள்ள வேண்டும். குறைந்தபட்சம் இடையூறு இல்லாத 7-8 மணிநேர உறக்கம் அவசியம். இவை இதய நோய், மாரடைப்பு அபாயத்தை நன்கு குறைக்கும்.

நன்றி - இந்து

## இன்றைய நாளில்...

- 1833 – இலங்கையில் மாவட்ட நீதிமன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன.
- 1863 – நவம்பர் மாதத்தின் கடைசி வியாழக்கிழமையை நன்றியறிதல் நாளாக அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் அறிவித்தார்.
- 1932 – பிரித்தானியாவிடமிருந்து ஈராக் விடுதலை பெற்றது.
- 1952 – ஐக்கிய இராச்சியம் வெற்றிகரமாக அணுவாயுதச் சோதனையை நடத்தியது.
- 1962 – சிக்மா 7 விண்கலம் வெற்றிகரமாக ஏவப்பட்டது. வொல்லி சீரா ஒன்பது மணிநேரத்தில் ஆறு தடவைகள் பூமியைச் சுற்றினார்.
- 1985 – அட்லாண்டிஸ் விண்ணோடம் தனது முதலாவது விண்வெளிப் பயணத்தை ஆரம்பித்தது.
- 2007 – மன்னார் மாவட்டம், விளாத்திக்குளம், முள்ளிக்குளம் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட இலங்கை இராணுவத் தாக்குதல் தமிழீழ விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

ஐ.எம்.எவ் கடனால் நாடு முன்னேற ஆரம்பிக்கும்போது மக்கள் எலும்பும் தோலுமா ஆகிடுவாங்கள் ..



# சிறுப்பிட்டியில் பட்டப்பகலில் இளைஞன் மீது வாள்வெட்டு

பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் சிறுப்பிட்டிப் பகுதியில் நேற்றுப் பகல் முச்சக்கர வண்டியில் பயணித்த இளைஞர் ஒருவரை 'பட்டா' ரக வாகனத்தில் வந்த நபர்கள் துரத்தித் துரத்தி வாளால் வெட்டியுள்ளனர். இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான லக்சன் என்பவர் மீதே வாள் வெட்டு நடத்தப்பட்டுள்ளது. நாயன் மார்கட்டைச் சேர்ந்த குறித்த நபர் சிறுப்பிட்டியில் திருமணம் செய்து வசித்து வருகின்றார்.

இந்நிலையில், முச்சக்கர வண்டியில் பயணித்த இந்த நபரை விரட்டிச் சென்று நேற்றுப் பகல் வாள் வெட்டு நடத்தப்பட்டுள்ளது.

தப்பியோடிய நபர் சிறுப்பிட்டி வைரவர் கோயிலுக்குள் புகுந்த போதும் அங்கு வைத்தும் அவரை வாளால் வெட்டி விட்டு வன்முறைக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது. வீதியால் சென்றவர்கள் வாள் வெட்டால் காயமுற்ற இளைஞரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர்.

# நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தக் கோரி கிளிநொச்சியில் கவனயீர்ப்புப் போராட்டம்

## அரச தலையீட்டை தவிர்ப்பதற்கான பரிந்துரை மனுவும் வாசிப்பு

நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தக் கோரி கிளிநொச்சி நகரில் நேற்று (02) கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.

நீதித்துறை மீது அரச நிர்வாகத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வகை நெருக்கீடுகள் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தின் முன்னாள் நீதிபதி ரி.சரவணராஜாவுக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்குமாறு கோரியே போராட்டம் நடைபெற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (இலங்கைத் தமிழரசுக் கட்சி) கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்ரெஸுக்கு அனுப்பிவைப்பதற்கு ஏதுவாக இன்று கொழும்பில் வைத்து ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆன்ட்ரே பிரான்ஸிடம், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படும்.



நீதித்துறை மீதான அரச நெருக்கீடுகளுக்கு பரிகாரம் காண்பதற்கான பரிந்துரைப்பு மனுவும் வாசிக்கப்பட்டது.





இராணுவத்தின் 74 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அநுராதபுர ஜெய ஸ்ரீ மஹா போதி,கண்டி புனித ஸ்ரீ தலதா மாளிகையில் ஆசீர்வாத பூஜைகள் நடைபெற்றன. நிகழ்வில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே மற்றும் இராணுவ உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# பொருளாதாரம், ஆட்சிமுறை சீர்த்திருத்தங்கள் மீது முன்னுரிமை அவதானம் அவசியம்

## தேசிய சமாதானப் பேரவை

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவித் திட்டத்தின் இரண்டாவது தவணைக்கொடுப்பனவைப் பெறுவதற்கு அரசாங்கம் தவறியிருப்பது எமது பொருளாதாரத்தின் ஆபத்தான நிலைமையை வெளிக்காட்டுகிறது. அத்தோடு, இலங்கையின் பொருளாதார மீட்சி இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் சர்வதேச நாணய நிதியம் கூறியிருக்கிறது.

நிர்ணயிக்கப்பட்ட பொருளாதார இலக்குகளை குறிப்பாக, அரசாங்கத்தின் வருவாய்ப் பெருக்கத்தில் ஏற்படக்கூடிய ஒரு வீழ்ச்சியின் விளைவான பட்ஜெட் பற்றாக்குறையைக் குறைப்பது தொடர்பிலான இலக்குகளை அரசாங்கம் அடையவில்லை என்றும் சர்வதேச நாணய நிதியம் கூறியிருக்கிறது. 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இரண்டாவது தவணைக் கொடுப்பனவை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் தற்போதைய தருணத்தில் மறுத்திருப்பது இலங்கையின் பொருளாதாரத்தில் முதலீடுகளைச் செய்ய முன்வரக்கூடியவர்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்திவிடும்.

அலுவலர் மட்ட இணக்கப்பாட்டை எட்டிய பின்னரே உதவித் திட்டத்தின் கீழான இரண்டாவது தவணைக் கொடுப்பனவு விடுவிக்கப்படும் என்றும் அது எப்போது நடைபெறும் என்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒரு கால அட்டவணை கிடையாது என்றும் சர்வதேச நாணய சபை கூறியிருக்கிறது.

அரசாங்கம் அதன் ஒப்பந்தங்கள் மற்றும் கொள்வனவுச் செயற்பாடுகள் குறித்த விபரங்களை இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யவேண்டும் என்ற நிபந்தனை போன்று வெளிப்படைத் தன்மையை வலியுறுத்தும் பல நிபந்தனைகளை சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ளது. வரி விடுவிப்பு முறைகளுக்கான நியாயப்பாடு குறித்து விளக்கமளித்து அதன் மூலம் பயனடைபவர்கள் யார் யார் என்ற விபரங்களைத் தரவேண்டும் என்றும் அது கேட்டிருந்தது. அந் நிபந்தனைகளில் பலவற்றை நிறைவேற்ற அரசாங்கம் தவறியமை பொருளாதார சீர்திருத்தச் செயன்முறை மீதான அதன் பற்றுறுதி மீதான நம்பிக்கையை இழக்கச் செய்திருக்கிறது.

நாடும் மக்களும் முகங்கொடுக்கும் பொருளாதார சவால்களின் பாரதூரத்தன்மையைக் கருத்திற்கொண்டு எதிர்க்கட்சிகளுடன் கலந்தாலோசித்து ஆட்சிமுறைப் பிரச்சினைகளைக் கையாளுமாறு நாம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம்.

எதிர்க்கட்சிகளுக்கு அரசாங்கம் அழைப்பு விடுக்கவேண்டுமென்றும் அவ்வாறு விடுக்கப்படக்கூடிய அழைப்புக்கு எதிர்க்கட்சிகள் சாதகமான முறையில் பதிலளித்து சர்வதேச நாணய நிதியத்தின் உதவித்திட்டம் குறித்து ஆராயவேண்டுமென்றும் தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்துகிறது. அவசியமானால் அந்த உதவித்திட்டத்தில் திருத்தங்களைச் செய்வதற்கான வழிவகைகளை ஆராய்ந்து நாட்டு மக்களில் பெரும் பாதிப்புக்குள்ளாகக்கூடிய நிலையில் இருக்கும் பிரிவினரின் நலன்களை மனதிற்கொண்டு இருதரப்பு கருத்தொருமிப்பு உணர்வுடன் அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் நடந்து கொள்ளவேண்டும்.

பொருளாதாரத்தை சரியான தடத்தில் வைக்கவேண்டுமானால் அரசாங்கம் கவனிக்கவேண்டியமையப் பிரச்சினைகள் ஆட்சிமுறையுடன் தொடர்புடையவையே என்று தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது. ஆட்சிமுறையின் குறைபாடுகளே ஊழலுக்கும் தண்டனையின்மைக்கும் வழிவகுத்துள்ளன.

பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பதில் மக்களால் எதிர்கொள்ளப்படும் துயரங்கள் அதிகரித்த வண்ணமுள்ளன. இந்தச் சூழ்நிலை போராட்டங்களுக்கு வழிவகுக்கலாம். மக்களின் பொருளாதார இடர்பாடுகளைத் தணிப்பதற்கு பல்வேறு கட்சிகள் ஏட்டிக்குப் போட்டியாக வாக்குறுதிகளை வழங்குகின்றன. இது சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார சீர்திருத்தச் செயற்றிட்டத்துக்கு பாதிப்பாக அமையும் ஆபத்தைக் கொண்டுள்ளது.

அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மற்றும் இணையவெளி பாதுகாப்புச் சட்டமூலம் போன்றவற்றைப் பயன்படுத்தி மக்களின் போராட்டங்களையும் கண்டனங்களையும் ஒடுக்குவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளக்கூடிய முயற்சிகள், நிலைமையை மேலும் மோசமாக்கும் என்று நாம் விசனமடைகிறோம்.

பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்வதற்கான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூல வரைவு அதன் வீச்செல்லையில் அகல்விரிவானதாக இருப்பதுடன் பொதுப் போராட்டத்தில் அல்லது தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுகின்றவர்களைக் கைது செய்வதற்கான அதிகாரத்தை அரசாங்கத்துக்கு வழங்குகிறது. பொதுமக்களை அல்லது பொதுமக்களில் ஒரு பிரிவினரை அச்சுறுத்தியதாக குற்றஞ்சாட்டப்படுபவர்களை இந்தச் சட்டத்தின் கீழ் கைதுசெய்ய முடியும்.

தவறான அறிக்கைகள் அல்லது அச்சுறுத்தல்கள் வேதனையை ஏற்படுத்தக்கூடிய கூற்றுகளில் இருந்து ஆட்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டதே இணையவெளி பாதுகாப்பு சட்டமூலம் என்று கூறப்படுகிறது.

ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதற்கான ஏற்பாடு இந்தச் சட்டமூலத்தில் இருக்கிறது. எந்தவொரு சமூக ஊடகக் கணக்கையும் அல்லது இணையவழிப் பிரசுரத்தையும் இந்த ஆணைக்குழுவினால் தடைசெய்யவோ அல்லது இடைநிறுத்தவோ முடியும் என்பதுடன் பெருமளவுக்கு உள்ளுணர்வு சார்ந்தவையாக அமையக்கூடிய குற்றச்செயல்களுக்கு சிறைத்தண்டனையையும் சிபாரிசு செய்யக்கூடியதாக இருக்கும்.

அதனால் இந்த இரு ஜனநாயக விரோத சட்டமூலங்களையும் உடனடியாக வாபஸ் பெறுமாறும் பொருளாதாரப் பிரச்சினைகளை குறிப்பாக, சர்வதேச நாணய நிதியத்தினால் குறிப்பிடப்பட்ட காரணிகளைக் கையாளுவதில் அக்கறை காட்டுமாறும் அரசாங்கத்தை நாம் கோருகிறோம்.

# வென்னப்புவவில் குளவிக்கொட்டுக்கு இலக்கான அதிபர் உட்பட 26 பேர் வைத்தியசாலையில்

ரஸீன் ரஸ்மின்

வென்னப்புவ - மார்ட்டின் லூதர் கல்லூரியின் அதிபர் உட்பட 26 பேர் நேற்று (02) பிற்பகல் குளவிக்கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குளவிக்கொட்டுக்கு இலக்கான அதிபர் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் லுணுவில பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குளவிக் கொட்டுக்கு இலக்காகி காயமடைந்தவர்களுள் அதிபர், நான்கு ஆசிரியர்கள் மற்றும் 21 மாணவர்கள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், அதிபர், இரண்டு ஆசிரியர்கள் மற்றும் நான்கு மாணவர்கள் மேலதிக சிகிச்சைக்காக லுணுவில வைத்தியசாலையிலிருந்து, மாரவில தள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த பாடசாலைக்கு அருகில் உள்ள தோட்டத்தில் இருக்கும் குளவிக் கூட்டில் இருந்து வந்த குளவிகளே இவ்வாறு அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை கொட்டியதாக தெரிவிக்கப்படுகிறது.

# முல்லைத்தீவில் கத்திமுனையில் கொள்ளை முயற்சி; திருடர்கள் மக்களால் மடக்கிப்பிடிப்பு

விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுதந்திரபுரம் கிராமத்தில் கத்தியைக் காட்டி கொள்ளையடிக்க முற்பட்ட திருடர்களை மக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று (02) காலை இடம்பெற்றுள்ளது.சுதந்திரபுரம் பகுதியில் வாழ்வாதாரமாக சிறிய கடையொன்றை வைத்து நடத்தி வரும் பெண்ணொருவரின் கடைக்குச் சென்ற கொள்ளையர்கள் கத்தியைக் காட்டி குறித்த பெண்ணிடம் இருந்த பணத்தைக் கொள்ளையடிக்க முயன்றுள்ளனர்.

இதன்போது கொள்ளையர்கள் கிராம மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு கட்டிவைக்கப்பட்டு, பொலிஸாருக்குத் தகவல் வழங்கிய நிலையில், சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் திருடர்களைக் கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த (01)ஞாயிறன்று மூன்று பேர் கொண்ட இந்தக் கொள்ளைக்கும்பல் சுதந்திரபுரம் கிராமத்திற்குள் வந்து கடையொன்றில் கத்தியைக் காட்டி பணப்பறிப்பில் ஈடுபட்டுள்ளது.

குறித்த திருடர்களின் வசிப்பிடம் தொடர்பில் முன்னுக்குப் பின் முரணான இடங்களை கூறிவந்த நிலையில், ஒருவரின் அடையாள அட்டையில் கிளிநொச்சி முறிப்பு என முகவரி காணப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இரு கொள்ளையர்களும் புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (02.10.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 202.6143 | 213.3102 |
| கனேடியன் டொலர் | 233.0579 | 243.9806 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.8141 | 45.7143 |
| யூரோ | 334.9209 | 349.9490 |
| ஜப்பான் யென் | 2.1180 | 2.2108 |
| சிங்கப்பூர் டொலர் | 231.4652 | 242.1132 |
| ஸ்ரேலிங் பவுன் | 387.3246 | 402.9878 |
| சுவிஸ் பிரான்ங் | 344.6744 | 362.4949 |
| ஐ.அ. டொலர் | 318.2787 | 329.0139 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 859.0457 |
| குவைட் | குவைட் தினார் | 1,046.9793 |
| ஓமான் | ஓமான் றியால் | 840.3356 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.7295 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 86.2607 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 88.0773 |

# அம்பியூலன்ஸில் கடத்தப்பட்ட ஐஸ் போதைப் பொருள்

## சாரதி தப்பியோட்டம்; ஒருவர் கைது:

மன்னார் நகர் நிருபர்

மன்னார், முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளக்கமம் பகுதியில் ஐஸ் போதைப்பொருள் 179 கிராமுடன் நேற்று முன்தினம் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முருங்கன் பாடசாலைப் பின்புற மைதானத்தில் அரச அம்பியூலன்ஸில் ஐஸ் போதைப் பொருளுடன் சென்ற நிலையில் வவுனியா வைத்தியசாலையில் பணிபுரியும் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பிரதான சந்தேக நபரான முருங்கன் வைத்தியசாலை அம்பியூலன்ஸ் சாரதி தப்பியோடியுள்ளார்

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் பிரகாரம் மன்னார் மாவட்ட பொது பொலிஸ் அத்தியட்சகர் சந்திரபாலவின் பணிப்புரைக்கமைவாக மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போதே போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.இந்நிலையில், குறித்த இரு சந்தேக நபர்களும் பொலிஸ் அதிகாரியை கடித்து, தாக்கிவிட்டு தப்பிக்க முயன்ற நிலையில், பிரதான சந்தேக நபரான அம்பியூலன்ஸ் சாரதி தப்பி யோடியுள்ளார். மற்றைய நபரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

வங்காலையைச் சேர்ந்த அம்பியூலன்ஸ் சாரதியான பிரதான சந்தேக நபர் முன்னரும் பல்வேறு கடத்தல் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாகவும், அம்பியூலன்ஸில் பல தடவைகள் கடத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கலாம் எனவும் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. சந்தேக நபர்களின் தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் அதிகாரி மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# மரத்திலிருந்து தவறிவீழ்ந்து உயிரிழப்பு

## கொக்கட்டிச்சோலையில் சம்பவம்

*கனகராசா சரவணன்*

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் மரத்தில் ஏறி மரக்கிளைகளை வெட்டிக் கொண்டிருந்த ஒருவர் தவறி வீழ்ந்து நேற்று உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவடிமுன்மாரி 40ஆம் கொலனியைச் சேர்ந்த தர்மலிங்கம் லக்ஷ்மன் (35 வயது) என்பவரே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்தாராவார்.

மாவடி முன்மாரிபகுதியில் உள்ள மரம் ஒன்றை வெட்டுவதற்காக சம்பவ தினமான நேற்றுக் காலை 10 மணிக்கு மரத்தில் ஏறி மரக்கிளைகளை வெட்டிக் கொண்டிருந்தபோது தவறி வீழ்ந்து சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கஞ்சா வைத்திருந்தவர் பொலிஸாரால் கைது

குடா ஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராணுவ முகாமுக்கருகில் இருநூற்று ஐந்து கிராம் கஞ்சாவை தன்வசம் வைத்திருந்த ஒருவர் குடா ஓயா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹாகனதரவ யாய 02, ரம்பேவயில் வசிக்கும் 42 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

ஞாயிறு 2023.10.01

உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம்: 5254 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 30,225,432.00
ஆங்கில எழுத்து: S — வெற்றி இலக்கங்கள்: 8 3 2 0 0 7

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம்: 3496 — சீட்டிழுப்பு திகதி: 2023.10.01 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 62,513,804.80
ஆங்கில எழுத்து: T — வெற்றி இலக்கங்கள்: 48 49 64 77 — விசேட எழுத்து: T
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம்: 56066

**Mega POWER** — சீட்டிழுப்பு இலக்கம்: 1602 — 2023.10.01 — 72860 — அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 409,329,068.00
ஆங்கில எழுத்து: M — சுப்பர் இலக்கம்: 26 — வெற்றி இலக்கங்கள்: 03 04 11 21
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00

**Lucky 7 லக்கி** — திகதி: 2023.10.01 — சீட்டிழுப்பு இலக்கம்: 0080
வெற்றி இலக்கினம்: ரிஷபம் — வெற்றி இலக்கங்கள்: 5 9 3 4 9 9 — L7 இலக்கம்: 2 1
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு: ரூ. 11,268,221.36

**ஹதஹன** — திகதி: 2023.10.01 — சீட்டிழுப்பு இலக்கம்: 563 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு: ரூ. 3,048,440.80
வெற்றி இலக்கினம்: மேஷம் — வெற்றி இலக்கங்கள்: 22 26 34 41 — விசேட இலக்கினம்: மேஷம்

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம்: 1284 — 2023.10.01 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 113,275,239.20
ஆங்கில எழுத்து: W — வெற்றி இலக்கங்கள்: 12 58 78 79 — விசேட எழுத்து: W
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம்: 12918

## கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விவகாரம்:

# நீதிபதியை அச்சுறுத்தி உண்மைகளை மூடிமறைக்க முயல்வார்களா?

## ரவிகரன் அச்சம்



விஜயரத்தினம் சரவணன்

நீதிபதி சரவணராஜாவுக்கு குருந்தூர் மலை விவகாரத்தில் அரச தரப்பால் அரசியல் ரீதியாகப் பிரயோகிக்கப்பட்ட மன அழுத்தம் மற்றும் உயிர் அச்சுறுத்தல் காரணமாக அவர் தனது பதவியைத் துறந்து இந்த நாட்டைவிட்டு வெளியேறியுள்ள இத்தகைய சூழலில், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்திலும் அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள் பிரயோகிக்கப்பட்டு உண்மைத் தன்மை மூடி மறைக்கப்படுமோ என்ற அச்சம் எழுவதாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்று முன்தினம் (01) ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்த நிலையில், அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சர்வதேச ரீதியில் சிறுவர்களும், முதியவர்களும் ஒக்டோபர் முதலாம் திகதி தமக்கான தினத்தில் மகிழ்வோடிருக்கின்றனர்.

இந்நிலையில், இறுதிக்கட்டப் போர்க்காலத்தில் இராணுவத்திடம் கையளித்த சிறார்களையும், உறவுகளையும் மீளக் கையளிக்குமாறு வலியுறுத்தி எமது உறவுகள் இரண்டாயிரம் நாட்களுக்கும் மேலாக பல்வேறு துன்ப துயரங்களுக்கு மத்தியில் தொடர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதுமாத்திரமன்றி, இந்த நாட்டில் நீதித் துறையின் சுயாதீனத்தன்மைக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. குறிப்பாக, அரசியல் ரீதியாக அரச தரப்புகள் முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு அழுத்தங்களைப் பிரயோகித்து, உயிர் அச்சுறுத்தல் விடுத்து இவ்வாறாக பல வழிகளிலும் நீதிபதியைத் துன்புறுத்திய நிலையில், நீதிபதி தனது பதவியைத் துறந்து இந்த நாட்டிலிருந்து வெளியேறியிருக்கின்றார்.

தற்போது கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரம் இடம்பெற்று வருகின்றது. முல்லைத்தீவு நீதிபதி, சட்ட வைத்திய அதிகாரி, தொல்லியல் துறையினர் ஆகிய தரப்புகளின் பங்கேற்புடன் இந்த மனிதப் புதைகுழி அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறான சூழலில் அரசியல் ரீதியாக அரச தரப்புகள் பிரயோகித்த அழுத்தங்கள் மற்றும் அச்சுறுத்தல் நிலைமைகள் காரணமாக நீதிபதி இந்த நாட்டைவிட்டு வெளியேறியுள்ள சூழலில், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்திலும், அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள் பிரயோகிக்கப்பட்டு உண்மைத்தன்மை மூடிமறைக்கப்படுமோ என்ற அச்சம் எமக்குத் தோன்றியிருக்கின்றது'' - என்றார்.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

## மடு வலயக்கல்வி அலுவலகத்தின் வெள்ளி விழா - சாதனையாளர்கள் கௌரவிப்பு



மன்னார் நகர் நிருபர்

மடு வலயக்கல்வி அலுவலகம் ஏற்பாடு செய்த வெள்ளி விழா நிகழ்வும் சாதனையாளர்கள் கௌரவிப்பும் நேற்று முன்தினம் (01) மாலை ஆண்டாங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றன.

மடு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ.கே.வொலன்ரைன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எம்.பற்றிக் டிறஞ்சன், சிறப்பு விருந்தினராக தி.ஜோன் குயின்ரஸ் மற்றும் கௌரவ விருந்தினர்களாக முன்னாள் மடு வலயக் கல்விப் பணிப்பாளர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இதன்போது மடு கல்வி வலயத்தில் 2022 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 5ஏ சித்திக்கு மேல் பெற்ற மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதிபெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில் இடம்பெற்ற சர்வதேச சிறுவர் தின நிகழ்வு



மன்னார் நகர் நிருபர்

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி மன்னார் பொலிஸார் ஏற்பாடு செய்த சர்வதேச சிறுவர் தின நிகழ்வு நேற்று முன்தினம் (01) காலை 11 மணியளவில் மன்னார் கரித்தாஸ் வாழ்வுதய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக கரித்தாஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார், மன்னார் மெசிடோ நிறுவனத் தலைவர் ஜாட்சன் பிகிராடோ, மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், மன்னார் பிரதேச செயலாளர், உதவி மாவட்ட செயலாளர் உள்ளடங்கலாக அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது தெரிவுசெய்யப்பட்ட மன்னாரிலுள்ள சிறுவர் இல்லம் ஒன்றைச் சேர்ந்த சிறுவர்கள் கலந்துகொண்டு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளை அரங்கேற்றினர்.

அதன்பின்னர் விருந்தினர்களால் சிறுவர்களுக்கு பரிசுப்பொதி வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

## நீரில் மூழ்கி இளைஞன் மரணம்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச எல்லைக்குட்பட்ட நந்திக்கடல் பகுதியில் நீரில் மூழ்கி நேற்று முன்தினம் (01) ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மந்துவில் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய தர்மராசா நிசாந்தன் என்ற இளைஞன் நேற்று முன்தினம் அதிகாலை 5.30 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்று நந்திக்கடல் பகுதியில் நீரில் மூழ்கி, மயங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

அவரை மீட்டு புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவரின் உயிரிழப்பு தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மோட்டார் சைக்கிள் – பிக்கப் வாகனம் மோதி விபத்து: ஒருவர் உயிரிழப்பு



சாவகச்சேரி நிருபர்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுணாவில் பகுதியை அண்மித்த ஏ9 வீதியில் நேற்று முன்தினம் (01) இரவு 9 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் விடுதி உரிமையாளர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நுணாவில் பகுதியிலிருந்து சாவகச்சேரி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் -சாவகச்சேரியிலிருந்து நுணாவில் நோக்கிச் சென்ற பிக்கப் வாகனமும் ஒன்றோடு ஒன்று மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இதில் மோட்டார்சைக்கிளில் பயணித்த நுணாவில் பகுதியிலுள்ள விடுதியொன்றின் உரிமையாளரான 38 வயதான நபரே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கிறேட் வெஸ்டன் பாடசாலை மாணவன் பாவோதலில் முதலிடம் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவு



தலவாக்கலை நிருபர்

மாகாண மட்ட தமிழ் மொழி தினப் போட்டியில் பாவோதல் பிரிவு-3 போட்டியில் மத்திய மாகாணத்தில் 15 கல்வி வலயங்களுடன் போட்டியிட்டு முதலாம் இடத்தை கிறேட்வெஸ்டன் பாடசாலை மாணவன் எஸ்.தனுபிரசாந் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளார். இவரைப் பாராட்டும் முகமாக பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ் மாணவனுக்கு பதக்கம் அணிவித்து கௌரவித்தார். போட்டியில் வெற்றிபெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவனுக்கும் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் பாடசாலை நிர்வாகம் வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

அதேவேளை, நுவரெலியா கல்வி வலயத்தின்கீழ் இயங்கும் மிகவும் கஷ்ட பிரதேச பாடசாலையான கிறேட்வெஸ்டன் பாடசாலை மாகாண மட்டத்தில் நடைபெற்ற ஆங்கில மொழி தினப் போட்டிகள் மற்றும் தமிழ் மொழி தினப் போட்டிகளில் வெற்றிபெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகி சாதனை படைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாரிய மரம் சாய்ந்து வீதிப் போக்குவரத்து தடை

மஸ்கெலியா நிருபர்

மஸ்கெலியா - நோட்டன் வீதியில் கிரிவன்நெலிய பகுதியில் நேற்று (02) காலை 6.00 மணியளவில் வீதியருகிலிருந்த மரம் சாய்ந்ததால் இரண்டு மணிநேரம் போக்குவரத்து தடை ஏற்பட்டதென நோட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து நோட்டன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கருத்து தெரிவிக்கையில், அதிகாலை வேளையில் கனத்த மழையுடன் கூடிய காற்று வீசியதால் இம் மரம் சாய்ந்துள்ளது.

இம் மரத்தை நோட்டன் பொலிஸார் மற்றும் அப்பகுதியிலுள்ள மக்கள், நோர்வூட் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்கள் இணைந்து அகற்றியுள்ளனர். இதனைத் தொடர்ந்து இந்த வீதியில் போக்குவரத்துத் தடை நீக்கப்பட்டது.

# பலம் பொருந்தியவர்கள் ஒட்டுண்ணிகளாக வாழ்ந்தால் அச்சமூகத்தை மீட்க முடியாது

### வன பரிபாலனத் திணைக்களத்தின் ஆய்வு உத்தியோகத்தர் சுஹ்ரி லதீப் தெரிவிப்பு

கண்டி நிருபர்

“ஒரு சமூகத்திலுள்ள பலம் பொருந்தியவர்கள் ஒட்டுண்ணிகளாக வாழும் வரை அச்சமூகத்தை மீட்க முடியாது'' என்பது ஒரு தத்துவக் கருத்து. எனவே, இயன்றவரை சமூகத்திலுள்ள பலம் பொருந்தியவர்கள் விழிப்பாக இருக்கவேண்டும் - என்று வன பரிபாலனத் திணைக்களத்தின் ஆய்வு உத்தியோகத்தரும் உயரதிகாரியுமான சுஹ்ரி லதீப் தெரிவித்தார்.

மடவளை சிரேஷ்ட பிரஜைகள் சங்கத்தின் பிரதித் தலைவர் கலாபூஷணம் ஜே.எம்.ஹாபீஸ் தலைமையில் சர்வதேச முதியோர் மற்றும் சிறுவர் தின கொண்டாட்டங்கள் மடவளை மதீனா மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றன.

இதன்போது மடவளையைச் சேர்ந்த ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மற்றும் க.பொ.த. (சா/த) பரீட்சையில் 9 ஏ சித்தி பெற்றவர்கள், உயர்தரப் பரீட்சையில் 3 ஏ பெற்றவர்கள் மற்றும் ஆங்கிலப் பாடத்தில் ஏ சித்தி பெற்ற அனைவரும் கௌரவிக்கப்பட்டதுடன், முதியோர்கள் பலருக்கு ஒரு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான உலருணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே வன பரிபாலனத் திணைக்களத்தின் ஆய்வு உத்தியோகத்தரும் உயரதிகாரியுமான சுஹ்ரி லதீப் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு சமூகத்தின் பாதுகாவலர்கள் அல்லது பலம் பொருந்தியவர்களில் மூன்று பிரிவினர் காணப்படுவதாக சமூகவியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

படித்தவர்கள், பணம் படைத்தவர்கள், பதவிகளிலுள்ளவர்கள். இம் மூன்று சாராரும் சமூகத்தின் ஒட்டுண்ணிகளாக வாழத் தொடங்கினால் அச்சமூகம் சிதைவடைவதைத் தவிர்க்க முடியாது.

அதேபோல், பணம் படைத்தவர்களும் சமூகத்தின் முக்கிய வழிகாட்டிகள். எல்லாவற்றுக்கும் மேலாக சமூகத்தின் சரியான திசையை இனங்கண்டுகொண்டு நடத்துபவர்கள் படித்தவர்கள். இந்த மூன்று சாராருமே இன்று அதிகம் தவறிழைப்பதைக் காண்கிறோம். அதாவது, சமூகத்தில் உள்ளதை எல்லாம் சுரண்டி ஒட்டுண்ணிகளாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளது. இது ஒரு துரதிர்ஷ்ட நிலை. எமது மூதாதையர்களிடம் இப்படியான பண்புகள் குறைவாகவே இருந்தன - என்றார்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

## இந்திய உதவித் தூதுவராலயத்தின் அனுசரணையில் சுற்றுலாக் கண்காட்சி




கண்டி நிருபர்

மத்திய மாகாண சுற்றுலாத் துறையை அபிவிருத்திசெய்ய மாகாண சபையும் இந்தியத் தூதுவராலயமும் நடவடிக்கை எடுத்துள்ளன. அதில் ஓரங்கமாக கண்டி, இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயம் மற்றும் மத்திய மாகாண வர்த்தகம், வாணிப, சுற்றுலாத் திணைக்களம் என்பன இணைந்து கண்டியில் கல்வி, வர்த்தகம் அடங்கிய கண்காட்சியொன்றை நேற்று முன்தினம் (01) ஒழுங்குசெய்திருந்தன.

இதில் பாரம்பரிய உணவுகளை எடுத்துக் காட்டும் உணவுத் திருவிழாவும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யு. கமகே மற்றும் இந்திய உதவி உயர்ஸ்தானிகர் டாக்டர் எஸ்.ஆதிரா ஆகியோர் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தனர். சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய பலரும் கௌரவிக்கப்பட்டனர்.

## சிறுவர் உள்ளங்கள் களங்கமற்றவை

### தேசிய சமாதான சபை தெரிவிப்பு



கண்டி நிருபர்

சிறுவர் உள்ளங்கள் களங்கமற்றவை. அவர்கள் இயற்கைச் சூழலிலிருந்து சமாதானம் பற்றி எவ்வாறு நோக்குகின்றனர் என்பதை அறியும் வகையிலே தேசிய சமாதான சபையால் சிறுவர் சித்திரப் போட்டி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டதாக தேசிய சமாதான சபையின் செயற்றிட்ட அதிகாரி நிரோசா அந்தோனி தெரிவித்தார்.

கண்டி வாவிக்கரையில் இயற்கைச் சூழலில் இடம்பெற்ற சிறுவர் சித்திரப் போட்டியின்போதே ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார். கண்டியைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட மூவின மாணவர்களும் இதில் கலந்துகொண்டனர். சர்வதேச சிறுவர் தினத்துக்கு இணையாக இது இடம்பெற்றது.

## லிபியா - இத்தாலி இடையே நேரடி விமான சேவை



லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி முஹமது கடாபி கடந்த 2011ஆம் ஆண்டு அங்குள்ள கிளர்ச்சியாளர்களால் படுகொலை செய்யப்பட்டார்.

இதனையடுத்து லிபியாவுடனான விமான போக்குவரத்துக்கு இத்தாலி மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் தடை விதித்தன.

இந்நிலையில், லிபிய விமான நிறுவனமான மெட்ஸ்கி ஏர்வேஸ் மூலம் இத்தாலிக்கு மீண்டும் நேரடி விமான சேவை ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டது.

எனவே, லிபிய தலைநகர் திரிபோலியிலுள்ள மிட்டிகா சர்வதேச விமான நிலையத்திலிருந்து இத்தாலியின் பியூமிசினோ விமான நிலையத்துக்கு எம்.டி-522 என்ற விமானம் இயக்கப்பட்டது.

12 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்த விமான சேவைக்கு லிபிய பிரதமர் அப்துல் ஹமீத் டிபீபா பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

## நைஜீரியாவில் இறுதி ஊர்வலத்தில் 25 பேரைக் கடத்திய கும்பல்

நைஜீரியாவில் உயிரிழந்த ஒருவரின் இறுதி ஊர்வலத்தின்போது துப்பாக்கிமுனையில் 25 பேர் கடத்தப்பட்டுள்ளனர்.

நைஜீரியாவின் தென்மேற்கு மாகாணமான ஓட்டோவில் உயிரிழந்த ஒருவரின் இறுதிச்சடங்கு ஊர்வலம் நடைபெற்றது. இதில் உயிரிழந்தவரின் உறவினர்கள், நண்பர்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர். அப்போது திடீரென பயங்கர ஆயுதங்களுடன் வந்த மர்ம நபர்கள் அவர்களை சுற்றிவளைத்தனர்.

இதனையடுத்து துப்பாக்கிமுனையில் சுமார் 25 பேரை அவர்கள் கடத்திச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் அவர்கள் யார்? எதற்காக கடத்தினார்கள்? என்பது இன்னும் தெரியவில்லை. எனவே, பொலிஸார் கடத்தப்பட்டவர்களை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பான மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இரவுநேர களியாட்ட விடுதியில் தீப்பரவல்: 13 பேர் பலி!



ஸ்பெயின் நாட்டின் தென்கிழக்கு நகரமான முர்சியாவில் இரவுநேர களியாட்ட விடுதி இயங்கி வரும் நிலையில், வார இறுதியை முன்னிட்டு இங்கு பலர் கூடியிருந்தனர். அப்போது அந்த விடுதியில் திடீரென தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. இந்தத் தீ அருகிலிருந்த கட்டிடங்களுக்கும் வேகமாகப் பரவியது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புப் படையினர் சில மணிநேர போராட்டத்துக்குப் பின்னர் தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

எனினும், இந்தத் தீ விபத்தில் 13இற்கும் மேற்பட்டோர் உடல் கருகி சம்பவ இடத்திலேயே பலியாகினர். காயங்களுக்குள்ளானோர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

உலக செய்திகள்

## "பேச்சு சுதந்திரத்தை நசுக்க முயற்சி": கனேடிய பிரதமருக்கு எதிராக திரும்பிய எலான் மஸ்க்



கனடாவிலுள்ள ஜஸ்டின் ட்ரூடோ அரசாங்கம் பேச்சு சுதந்திரத்தை நசுக்க முயற்சி செய்கிறது என எக்ஸ் சமூக வலைத்தள நிறுவனத் தலைவர் எலான் மஸ்க் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தியா - கனடா இடையிலான மோதலுக்கு இடையில் கனடாவுக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை எலான் மஸ்க் முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக, எலான் மஸ்க் தெரிவிக்கையில்,

கனடாவில் கருத்து சுதந்திரத்துக்கு எதிராக கடுமையாக சட்டங்கள் உள்ளன. உலகிலேயே கருத்து சுதந்திரத்தை முடக்கும் அடக்கும் அரசுகளில் ஒன்றாக ஜஸ்டின் ட்ரூடோ அரசு உள்ளது. சமீபத்தில் ஒன்லைன் ஸ்ட்ரீமிங் நிறுவனங்களுக்கு எதிராகவும் சட்டத்தைக் கொண்டுவந்துள்ளனர். கனடாவில் இருக்கும் மக்களின் கருத்து சுதந்திரத்தை நொறுக்கிக்கொண்டு இருக்கிறார்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.





மகாத்மா காந்தியின் பிறந்தநாளையொட்டி அவரது நினைவிடத்தில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

## மணிப்பூர் மாணவர்கள் கொலை விவகாரம்: 4 பேர் கைது

மணிப்பூரில் 3 மாதங்களாக தேடப்பட்டுவந்த மெய்தீ சமூகத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட முக்கிய குற்றவாளியின் மனைவி மற்றும் இன்னொரு பெண் உட்பட நான்கு பேரை சிபிஐ கைதுசெய்து, குவகாத்தி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதாகவும் கைதானவர்களின் குழந்தைகள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கடந்த ஜூலையில் காணாமல்போன பிஜம் ஹேமன்ஜித் (வயது 20), ஹிஜாம் லிந்தோய்கம்பி (வயது 17) ஆகிய இருவரும் கடத்தி கொலைசெய்யப்பட்டமை அண்மையில் தெரியவந்தது. இச்சம்பவம் தொடர்பான புகைப்படங்கள், சமூக ஊடகங்களில் பரவின. இதையடுத்து, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில தினங்களாக மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். அப்போது, வன்முறைச் சம்பவங்கள் அரங்கேறின. போராட்டத்தைக் கட்டுப்படுத்த பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில், பலர் காயமடைந்தனர்.

குற்றவாளிகள் கைது குறித்து தன் சமூக வலைத்தள பக்கத்தில் பதிவிட்டுள்ள முதல்வர் பைரேன் சிங், சட்டத்தின் நீண்ட கைகளிலிருந்து குற்றவாளிகள் தப்ப முடியாது. அவர்கள் செய்த கொடூர குற்றத்திற்கு அதிகபட்சமாக மரண தண்டனை வழங்குவதில் அரசு உறுதியாக உள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

## அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் இருவருக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிப்பு




அமெரிக்காவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இருவருக்கு 2023ஆம் ஆண்டுக்கான மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களான கட்டாலின் கரிக்கோ மற்றும் ட்ரூ வைஸ்மேன் ஆகிய இருவருக்கு 2023ஆம் ஆண்டின் மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பூசி உற்பத்தியில் முக்கிய பங்காற்றிய மேற்படி ஆராய்ச்சியாளர்கள் இருவருக்கும் இவ்வருடத்துக்கான மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மெக்சிக்கோவில் தேவாலயத்தின் கூரை உடைந்து வீழ்ந்ததில் 10 பேர் உயிரிழப்பு



மெக்சிக்கோவிலுள்ள தேவாலயமொன்றின் கூரை உடைந்து விழுந்ததில் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளதாகவும் இடிபாடுகளுக்குள் 20இற்கு மேற்பட்டோர் சிக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 49 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

மெக்சிக்கோவின் கடலோர மாநிலமான தமௌலிபாஸிலுள்ள செண்டா குரூஸ் தேவாலயத்தின் கூரை உடைந்தமையினாலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சுமார் 100இற்கும் மேற்பட்டவர்கள் அடங்கியிருப்பதுடன், அதிகளவிலான குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர். தொடர்ந்தும் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## தெஹிவளையில் சிறுவர் - முதியோர் தின நிகழ்வுகள்







ஏ.எஸ்.எம்.ஜாவித்

தெஹிவளை- கல்கிஸை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் மரீனா ஆப்தீன் பசீர் சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு விஷேட நிகழ்வொன்றை நேற்றுமுன்தினம் தெஹிவளை பிரீசர் அவனியு பாக்கில் நடத்தினார்.

இதன்போது 5 தொடக்கம் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கும் 60 தொடக்கம் 80 வயதுக்கு ட்பட்ட முதியோருக்கும் சித்திரப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்களும் தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் தெஹிவளை - கல்கிஸை மாநகர சபையின் முன்னாள் மேயர் சுனித்ரா ரணசிங்க, மாநகர பிரதி ஆணையாளர் அனுஸா, முன்னாள் உறுப்பினர் குமார கோமஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



## அங்கம்பிட்டிய கூட்டுறவு கிராமிய வங்கியில் 7 கோடி ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளை

ரஸீன் ரஸ்மின்

வய்க்கால, அங்கம்பிட்டிய பிரதேசத்திலுள்ள கூட்டுறவு கிராமிய வங்கிக்குள் புகுந்த கொள்ளையர்கள் குழுவொன்று வங்கியின் பாதுகாப்புப் பெட்டகத்தை உடைத்து அதிலிருந்த சுமார் 7 கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடிச்சென்றுள்ளதாக வென்னப்புவ தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வங்கியின் ஜன்னல் கம்பியை வெட்டி அதன் வழியாக உள்ளே நுழைந்த கொள்ளையர்கள், தங்க நகைகள் வைக்கப்பட்டிருந்த பாதுகாப்புப் பெட்டகத்தை இயந்திரங்களின் உதவியுடன் உடைத்து அதிலிருந்த தங்க ஆபரணங்களைத் திருடிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வங்கியில் அடகுவைக்கப்பட்டிருந்த தங்க நகைகளே இவ்வாறு திருடிச்செல்லப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வங்கியில் சிசிடிவி கெமராக்கள் பொருத்தப்பட்டுள்ளபோதிலும், இந்தக் கொள்ளையின் பின்னர் வங்கியில் பொருத்தப்பட்ட கெமராக்களின் சில பகுதிகளையும் கொள்ளையர்கள் எடுத்துச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக வங்கியைச் சுற்றியுள்ள வீடுகளில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கெமராக்களை பரிசோதனை செய்து இக்கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய கொள்ளையர்களைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் வென்னப்புவ தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஜப்பானுக்கு செல்லவிருந்த விமானத்தில் ஏறி அமர்ந்த நபர் தொடர்பில் விசாரணைகள் நடத்த உத்தரவு

ரஸீன் ரஸ்மின்

கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஜப்பானுக்கு செல்லவிருந்த விமானத்தில் ஏறி அமர்ந்த நிலையில் கைதுசெய்யப்பட்ட நபர் தொடர்பில் விசேட விசாரணைகளை ஆரம்பிக்குமாறு நீர்கொழும்பு பதில் நீதவான் இந்திக்க சில்வா நேற்று உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

வத்தளை, ஹெந்தலையைச் சேர்ந்த ஏ.பி.சுதாகர் இந்திரஜித் என்பவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ஜப்பானில் சில காலம் பணியாற்றிய பின்னர் திருமணம் செய்துகொள்வதற்காக இலங்கைக்கு வந்தவர் எனவும், பின்னர் ஜப்பான் செல்வதாக மனைவியிடம் கூறி விட்டு கடந்த சனிக்கிழமை (30) வீட்டைவிட்டு வெளியேறியவர் எனவும் முதற்கட்ட விசாரணை களில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.






மீலாதுன் நபி விழாவும் மவ்லூது தமாம் வைபவமும் எஸ்.எம்.ஏ.முத்தலீப் தலைமையில் கடந்த வியாழக்கிழமை காலை கொழும்பு -12, மத்திய வீதி, 139ஆம் தோட்டத்தில் இடம்பெற்றன. இந்நிகழ்வில் அல் - உஸ்தாத் மபாஸ் நூழாரி சொற்பொழிவாற்றுவதையும் மவ்லூது தமாம் செய்வதையும் காணலாம்.

## முந்தல் பகுதியில் கால்வாயை கடக்க முற்பட்டவர் நீரில் அடித்துச்செல்லப்பட்டுள்ளார்

ரஸீன் ரஸ்மின்

முந்தல், தாராவில்லு பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் கிரியன்கல்லி கால்வாயைக் கடக்க முற்பட்ட நபரொருவர் கால்வாய் நீரோட்டத்தில் அடித்துச்செல்லப்பட்டு காணாமல் போயுள்ளார்.

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கிரியன்கல்லி கால்வாயின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ள நிலையிலேயே நேற்று முன்தினம் (01) மாலை குறித்த நபர் அதனைக் கடக்க முற்பட்டபோது இந்த அனர்த்தத்துக்கு முகங்கொடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல்போனவரைத் தேடும் பணியை கடற்படையினர் ஆரம்பித்துள் ளனர். நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய நபரே இவ்வாறு காணாமல் போனவராவார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



கொழும்பு 13, இலக்கம் 36 கன்னாரத் தெருவில் அமைந்துள்ள அகில இலங்கை பரத சங்கம் சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்திய நிகழ்வில் முன்னாள் நகர சபை உறுப்பினர் ஜோசப் பெர்னாண்டோ 100 குழந்தைகளுக்கு பாடசாலை உபகரணங் களை வழங்கினார்....

(படங்கள் எம்.நசார்)





சர்வதேச சிறுவர் தின நிகழ்வு கிண்ணியா அலிகார் மகா வித்தியாலயத்தில் திங்கட்கிழமை(02) அதிபர் எம்.எஸ்.அஹமட் ராஜி தலைமையில் பாடசாலை வளாகத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

**படம்:** சீனக்குடா செய்தியாளர்



கிழக்கு மாகாண பாடசாலை மெய்வல்லுனர் போட்டியில் வெற்றியீட்டி தேசிய மட்ட பாடசாலை மெய்வல்லுனர் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட கல்முனை கல்வி வலய அல்- பஹ்ரியா மகா வித்தியாலயத்தை சேர்ந்த மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.பைசால் தலைமையில் பாடசாலை முன்றலில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதி அதிபர்கள், பகுதி தலைவர்கள், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து மாணவர்களை கௌரவித்தனர்.

**படம்:** மாளிகைக்காடு செய்தியாளர்



**கிழக்கில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தில் கடந்தவெள்ளிக்கிழமை(29) மாலை பாண்டவர்கள், திரௌபதை, கிருஷ்ணர், தேவாதிகள் சகிதம் கடலில் குளித்து தீ மிதிக்கும் வைபவம் நடைபெற்றது. இவ்வாலய வருடாந்த உற்சவம் கடந்த 12ஆம் திகதி திருக்கதவு திறத்தல், கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். (பாண்டிருப்பு செய்தியாளர்)**

# 243ஆவது இராணுவப் படைப்பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சிறுவர் தினம்



மட்டக்களப்பு

கல்லடி 243ஆவது இராணுவப் படைப்பிரிவின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் சர்வதேச சிறுவர் தினக்கொண்டாட்ட நிகழ்வுகள் திங்கட்கிழமை(02) இடம்பெற்றன.

மட்டக்களப்பு - கல்லடி 243ஆவது இராணுவப் படைப்பிரிவின் பிரிக்கேட் கொமாண்டர் சந்திம குமாரசிங்க தலைமையில் பாலமீன்மடு கலங்கரை விளக்குக்கு அருகாமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரெட்ண, சிறப்பு விருந்தினராக அம்பாறையிலுள்ள 24ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்திரஸ்ரீ ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது சிறார்களுக்கு விசித்திர பொம்மலாட்ட கலைஞர்களால் இனிப்பு வகைகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், சிறார்களை மகிழ்விக்கும் முகமாக சிறுவர் பூங்காவில் பல்வேறு விளையாட்டுகளும் இசைநிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.



# அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபுக் கல்லூரியில் மீலாத் விழா





அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்

அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபுக் கல்லூரியின் உத்தம நபியின் உதய தின மீலாத் விழா நிகழ்வு 'நபிகளாரை நேசிப்போம்' எனும் தொனிப்பொருளில் அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபுக்கல்லூரியின் கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை(30) இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபுக் கல்லூரியின் அதிபர் மௌலவி ஏ.எல்.எம்.அஷ்ரப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஓய்வுபெற்ற கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ், அட்டாளைச்சேனை ஜம்இய்யதுல் உலமா சபைத் தலைவர் மௌலவி யூ.எல்.நியாஸ், ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் மௌலவி ஏ.எல்.எம்.ஹாசீம் மற்றும் மார்க்க உலமாக்கள், புத்திஜீவிகள், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கிழக்கிலங்கை அறபுக்கல்லூரி மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் மீலாத் போட்டி நிகழ்ச்சியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசுப்பொதிகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





சம்மாந்துறை சிறி கோரக்கர் தமிழ் வித்தியாலயத்தில் மேசைப்பந்து விளையாட்டு அறிமுகம் செய்யும் நிகழ்வும் பயிற்சி முகாமும் பாடசாலை அதிபர் எஸ்.இளங்கோபன் தலைமையில் வெள்ளிக்கிழமை(29) இடம்பெற்றன. பாடசாலை விளையாட்டு பயிற்றுவிப்பாளர் கே.எல்.எம்.சகி மற்றும் தேசிய கல்வி நிறுவனத்தின் சுகாதாரமும் உடற்கல்விக்குமான உதவி விரிவுரையாளர் கே.எல்.எம்.சப்றி, அக்கரைப்பற்று தேசிய பாடசாலை ஆசிரியர் எம்.எம்.எம்.ஆசிக் ஆகியோர் பயிற்றுவிப்பாளர்களாகக் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினர்.

**படங்கள்:** சம்மாந்துறை செய்தியாளர்

## கிழக்கு செய்திகள்

eastthamilan@gmail.com



கல்லடி தமிழருவி கலைக்கூடத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சிறுவர் தினம் மற்றும் முதியோர்தின நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (01) கல்லடி தமிழருவி இல்லத்தில் நடைபெற்றது. தமிழருவி ஆசிரியர் எஸ்.சிவநிதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மாணவர்களின் பாடல், கவிதை, நாடகம், கதைகூறல் ஆகிய நிகழ்வுகள் அரங்கேறின.

**படம்:** கல்லடி செய்தியாளர்

# வலயமட்ட விளையாட்டுப் போட்டியில் சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் முதலாமிடம்



பொலிவேரியன் செய்தியாளர்

சிறுவர்களுக்கான வலயமட்ட KIDS ATHLETICS - 2023 விளையாட்டுப் போட்டி கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

இதன்போது சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் பாடசாலையின் சார்பில் கலந்துகொண்ட தரம் 03, 04 ஆண், பெண் கலப்பு அணிகள் இரண்டும் வலய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்த வெற்றியைப் பெற்றுத்தந்த மாணவர்களுக்கும் அவர்களைப் பயிற்றுவித்த பாடசாலையின் உடற்கல்விப் பொறுப்பாசிரியர் எம்.எவ்.றிபாஸ் மற்றும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் என்.எம்.ஏ.ஆபாக் ஆகியோருக்கும் பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# மகாத்மா காந்தியின் 155ஆவது ஜனன தினம்





மட்டக்களப்பு

மகாத்மா காந்தியின் 155ஆவது ஜனன தினம் திங்கட்கிழமை(02) மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் தலைவர் கலாநிதி அ.செல்வேந்திரன் தலைமையில் காந்தி பூங்காவில் அமைந்துள்ள காந்தியடிகளாரின் நினைவுத் தூபியில் காலை 9.00 மணியளவில் ஜனனதின நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் முதல்வர் தி.சரவணபவன், மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் செயலாளர் க.பாரதிதாசன், மட்டக்களப்பு வர்த்தக சங்கச் செயலாளர் கே.தியாகராஜா உள்ளிட்ட சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டிருந்ததுடன், காந்தியடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தியதுடன், 'ரகுபதி ராகவ ராஜாராம்' பாடல் பாடி மரியாதை செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கோறளைப்பற்று பிரதேச சிறுவர் தின நிகழ்வுகள்



கல்குடா செய்தியாளர்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு "எல்லாவற்றையும் விட பிள்ளைகள் பெறுமதி மிக்கவர்கள்" எனும் தொனிப்பொருளில் சிறுவர் தின நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (01) கோறளைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிரதேச சிறுவர் சபைத் தலைவர் எம்.அனுஸ்சன் தலைமையில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகமும் பிரதேச செயலக சிறுவர் சபை மற்றும் சமுர்த்தி திணைக்களமும் இணைந்து நடத்தின.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச். முஸம்மில் கலந்துகொண்டதுடன் சிறப்பு அதிதிகளாக கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ரீ.நஜீப்கான், ஓட்டமாவடி கோட்டக் கல்வி அதிகாரி வீ.ரீ.அஜ்மீர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ அதிதிகளாக கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.றமீஸா, பிரதித் திட்டப்பணிப்பாளர் எச்.எம்.எம்.றுவைத், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் எஸ்.ஏ.பஷீர், நிர்வாக உத்தியோகத்தர் எம்.ஏ.எம்.தாஹிர், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.சூஸ் பேகம் மற்றும் சிறுவர் மகளிர் பிரிவு உத்தியோகத்தர், சிறுவர் சபை உறுப்பினர்கள், சிறுவர் கழக உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் எல்லாவற்றையும் விட பிள்ளைகள் பெறுமதி மிக்கவர்கள் என்ற சிறப்புப் பேச்சை உளவளத்துணை ஆலோசகர் மனூஸ் அபூபக்கர் நிகழ்த்தியதுடன் சிறுவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. சிறுவர் தினத்தை முன்னிட்டு கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்திய போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அதிதிகளால் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.



**சமுர்த்தி வீட்டு லொத்தர் சீட்டிழுப்பின் மூலம் வெற்றி பெற்றவருக்கான ரூபா 02 இலட்சம் காசோலையை அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் நஹீஜா முசாபிர் அண்மையில் வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.எம்.ஹமித், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம்.உனைஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.**

**படம்:** திராய்க்கேணி செய்தியாளர்

## போடியார் புலம்பல்!



பெற்றோல் டீசலுக்கு திரும்பவும் விலைய கூட்டிப்போட்டான் படுபாவி... அந்த நரி வந்தால் பால் பொங்கும், வில குறையும் எண்டு எலுவா சொன்னாங்க... இப்ப என்னடாண்டா எண்டா அசுப்பில்லாம் சாமண்ட வில எரிபொருளுட வில எல்லாம் கூட்டிப்போட்டு அவரு நாடு நாடா உலகம் சுற்றும் வாலிபன் மாதிரி திரியிறாரு. வரட்டும் அடுத்த எலக்சனுக்கு இவருக்கு நாங்க ஆரு எண்டத காட்டிறம்..!

# வயோதிபப் பெண் கழுத்தறுத்து 10 பவுண் ஆபரணம் கொள்ளை

## கொம்மாந்துறை பிரதேசத்தில் சம்பவம்

*கனகராசா சரவணன்*

மட்டு. ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள கொம்மாந்துறை பிரதேசத்தில் வீடொன்றுக்குள் புகுந்த சந்தேக நபர் ஒருவர் அங்கு தனியாக இருந்த வயோதிபப் பெண் அணிந்திருந்த 10 பவுண் பெறுமதியான ஆபரணங்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் திங்கட்கிழமை (02) இடம்பெற்றுள்ளது குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கொம்மாந்துறை பகுதியில் தனிமையில் இருந்த 67 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவரின் வீட்டினுள் சம்பவதினம் காலை 7.30 மணிக்கு துவிச்சக்கரவண்டியில் தனியாக சென்ற சந்தேக நபர் வீட்டினுள் புகுந்து அவருடன் உரையாடிய நிலையில் அவர் வீட்டினுள் இருந்து வெளியே வந்ததையடுத்து அவரின் கழுத்தை கத்தியால் வெட்டியதையடுத்து படுகாயமடைந்துள்ளார்.

பின்னர் அவரின் கழுத்திலிருந்த சுமார் 10 பவுண் கொண்ட தங்க ஆபரணங்களை கொள்ளையடித்துக்கொண்டு துவிச்சக்கரவண்டியில் தப்பியோடியுள்ளார். இதனையடுத்து வயோதிபப் பெண் சத்தமிட்டதையடுத்து அயலவர்கள் உடனடியாக அவரை வைத்தியசாலைக்கு கொண்டுசென்று அனுமதித்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பும் அச்சமும் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த ஏறாவூர் பொலிஸார், பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார், தடயவியல் பிரிவு பொலிஸார் மற்றும் மோப்பநாய் வரவழைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

# நாவிதன்வெளியில் காட்டு யானைகள் அட்டகாசம்

*பெரியநீலாவணை செய்தியாளர்*



அம்பாறை மாவட்டத்தில் தொடர்ச்சியாக யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருவதனால் பிரதேச மக்கள் அச்சமடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி, சவளக்கடை பிரதேசத்துக்குள் சனிக்கிழமை (30) இரவு உட்புகுந்த காட்டு யானைகள் நாவிதன்வெளி பிரதேச செயலகத்துக்கு அருகிலுள்ள நெற்களஞ்சிய சாலையை துவம்சம் செய்துள்ளது.

மேலும், அங்கிருந்த நெல் மூடைகளை நாசப்படுத்தியதுடன், அப்பகுதியிலுள்ள சுற்று வேலிகளையும் யானைகள் தகர்த்துள்ளன. பிரதேசத்தின் அண்டிய பகுதியிலுள்ள சில பயிர்களுக்கும் சேதங்களை ஏற்படுத்தியுள்ள அதேவேளை, இரவுவேளைகளில் இப்பகுதியில் வாழும் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

# தொழிற்சங்கங்களின் பலம் பலவீனமாகிக்கொண்டிருக்கின்றது

## அரசாங்க பொதுச் சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

*மாளிகைக்காடு, பாண்டிருப்பு செய்தியாளர்கள்*

தொழிற்சங்கங்களின் பலம் பலவீனமாகிக் கொண்டிருக்கின்றது. தொழிற்சங்கங்களால் விடுக்கப்படும் நியாயமான கோரிக்கைகளை அலட்சியம் செய்யும் அதிகாரிகளின் மனநிலையில் மாற்றத்தைக் கொண்டுவருவதற்கான செய்தியை தெளிவாகக் கூறுவதற்கு அரச உத்தியோகத்தர்கள் ஒற்றுமைப்பட வேண்டியது அவசியமாகும் என இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.புஹாது தெரிவித்தார்.

இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கத்தின் அம்பாறை மாவட்ட குழுக் கூட்டம் திருக்கோயில் குமர வித்தியாலயத்தில் சனிக்கிழமை (30) நடைபெற்றது. இதன்போது கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கத்தின் அமைப்பாளர் பி.கோகுலோஜன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தொழிற்சங்கத்தின் ஸ்தாபகத்தலைவர் கே.நடராஜா உட்பட தொழிற்சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில், அரசியல் அதிகாரம்கொண்டவர்களின் எல்லை மீறிய அழுத்தங்களுக்கு இடமளிக்காது, அரச சேவையின் சுயாதீனத்தையும் கௌரவத்தையும் பாதுகாக்கவேண்டிய நிலைமைக்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதற்காக அனைத்து அரச உத்தியோகத்தர்களும் வேறுபாடுகளை மறந்து தம்மோடு கைகோர்க்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இதன்போது புதிதாக இணைந்துகொண்ட அங்கத்தவர்களுக்கான தொழிற்சங்க அங்கத்துவப் பத்திரங்களும் வழங்கப்பட்டதுடன் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தற்போதைய விலைவாசி அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு உயர்வுக்கேற்ப அரச ஊழியர்களின் சம்பளத்தை 20 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கக் கோரல், 2020, 2021 மற்றும் 2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றக் கட்டளைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த கோரல், கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான 2024ஆம் ஆண்டுக்கான இடமாற்றத்தின்போது உத்தியோகத்தர்களது கோரிக்கைக்கு மாற்றமாக இடமாற்றக் கட்டளைகள் வழங்கப்படுவதனை முடியுமானவரை தவிர்க்கக் கோரல், பொது நிர்வாக அமைச்சின் 10/2000 சுற்றறிக்கைக்கு அமைவாக, கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள அமைச்சுகளில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை உள்ளடக்கியதான ஆலோசனைக் குழுக்களை தாபிப்பதன் மூலம் காரியத்திறனையும் உற்பத்தி பெருக்கத்தையும் மேம்படுத்த கோரல், அம்பாறை மாவட்ட வெளிக்கள கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு கடந்த ஆட்சியின்போது மறுக்கப்பட்டுள்ள சலுகை விலை அடிப்படையிலான மோட்டார் சைக்கிள் வழங்கும் திட்டத்தை 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவில் உறுதிப்படுத்தக் கோரல், வடக்கு, கிழக்கிலுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கென தனியான வீடமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரல், உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் தற்காலிக மற்றும் பதிலீட்டு ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க கோரல், திறமை அடிப்படையிலான பதவி உயர்வு,



போட்டிப் பரீட்சை முறைமையை மீள ஏற்படுத்த கோரல், அரசாங்க முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகத்தர்களை எம்.என்.4 சம்பள அளவுத் திட்டத்தில் அமர்த்துவதோடு, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் தொழிற் தகைமையை மேம்படுத்தும் வகையில் முகாமைத்துவப் பயிற்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்த கோரல், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் மேற்பார்வை தரத்திலான சுப்ரா தர பதவி அணியை ஏற்படுத்த கோரல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேற்படி தீர்மானங்கள் ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சர், பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர், வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர், கிழக்கு மாகாண ஆளுநர், இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், தாபன பணிப்பாளர் நாயகம், வரவு-செலவுத் திட்டப் பணிப்பாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கத்தின் தலைவர் க.நடராஜா உரையாற்றுகையில், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமை, விலைவாசி அதிகரிப்பு, அதனைத் தொடர்ந்து வந்துள்ள அரசியல் நெருக்குவாரங்களுக்கு மத்தியில் அரச சேவையானது தொழில் உரிமை, பாதுகாப்பு, கௌரவம் என்பனவற்றை இழந்த நிலையில் இன்று ஆட்டம் கண்டுள்ளது. தொழில் வல்லுனர்கள், நிபுணத்துவம் மிக்க கல்வியியலாளர்கள் உட்பட ஏன் நீதிபதிகளே இந்த நாட்டை விட்டு தப்பியோடும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது. இதிலிருந்து பாதுகாக்க அனைத்து அரச உத்தியோகத்தர்களும் ஒன்றிணையவேண்டியது காலத்தின் கட்டாயமாகும் - எனத் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்

eastthamilan@gmail.com

# சாய்ந்தமருதில் ஆயுர்வேத முகாம்





*பொலிவேரியன் செய்தியாளர்*

சாய்ந்தமருது கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலையால் ஏற்பாடுசெய்யப்பட்ட இலவச ஆயுர்வேத வைத்திய முகாமொன்று சாய்ந்தமருது கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலையில் வெள்ளிக்கிழமை (27) இடம்பெற்றது.

இந்த முகாமுக்கு இந்தியாவின் கேரளாவிலிருந்து வருகை தந்த பிரபல மருத்துவ நிபுணர் டாக்டர் ஸ்டாலின் சிகிச்சை வழங்கினார். இதன்போது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.எல்.எம்.றிபாஸ், ஆயுர்வேதப் பணிப்பாளர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில், பொதுமக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு ஆலோசனையுடன் கூடிய மருத்துவ சிகிச்சையளிக்கப்பட்டதுடன், வருகை தந்த அனைத்து பொதுமக்களும் பலனடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வேகக்கட்டுப்பாட்டை இழந்த உழவு இயந்திரம் விபத்து

## குடும்பஸ்தர் உயிரிழப்பு

*அப்துல்சலாம் யாசீம்*

திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கநகர் கிராமத்தில் உழவு இயந்திரம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் மூன்று பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (01) இடம்பெற்றுள்ளது. குறித்த விபத்துச் சம்பவத்தில் மூதூர், பாரதிபுரம் கிராமத்தைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சுந்தரவதனன் (வயது 39) என்பவரே உயிரிழந்துள்ளதாக தெரிய வருகின்றது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, உழவு வேலைக்காக பாரதிபுரம் பகுதியிலிருந்து கிளிவெட்டி, தங்கநகர் நோக்கிச் சென்றபோது தங்கநகர் பகுதியில் வைத்து உழவு இயந்திரம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகிலுள்ள வாய்க்காலினுள் விழுந்ததால் குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது உழவு இயந்திரத்தைச் செலுத்திவந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான குறித்த இளம் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார். அத்துடன், அருகிலிருந்த நபர் சிறு காயங்களுக்குள்ளான நிலையில் தப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதல்நிலை மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வு



*கிண்ணியா செய்தியாளர்*

திருகோணமலை மாவட்ட முதல்நிலை மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வு திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் சனிக்கிழமை (30) நடத்தப்பட்டது.

திருகோணமலை நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி விழாவில், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் தலைமை விருத்தினராகக் கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது 2022ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவு, கணிதப் பிரிவு, முகாமைத்துவப் பிரிவு, கலைப் பிரிவு, உயிரியல் தொழில்நுட்பம், பொறியியல் தொழில்நுட்பம் ஆகிய பிரிவுகளில் திருகோணமலை மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும், பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகிய தந்தையை இழந்த மாணவருக்கும் கல்வியைத் தொடர பணவசதியற்ற மாணவர்களுக்குமாக மொத்தம் 60 மாணவர்களுக்கு நிதி வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள், கோட்டக் கல்வி அதிகாரிகள், பாடசாலை முதல்வர்கள், ஆசிரியர்கள், திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்க நிர்வாகிகள், பெற்றோர் ஆகியோரும் கலந்து கொண்டனர். மேலும், இதற்கான நிதியுதவியினை கனடாவில் உள்ள திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர்களை நற்பண்புகளோடு வளர்க்கும் பொறுப்பு பெற்றோரின் கைகளில் உள்ளது

## அல்-ஸபா கனிஷ்ட வித்தியாலய அதிபர் அன்வர் நௌசாட்

*கோணாவத்தை செய்தியாளர்*



இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள். எமது சமுதாயத்தின் சொத்துகளான சிறுவர்களை நற்பண்புகளோடு வளர்க்கின்ற மிகப்பாரிய பொறுப்பு பெற்றோரின் கைகளில் இருக்கிறது. அதேபோல் ஏனையோரை மதித்து மரியாதை செய்கின்ற பண்பையும் சிறுவர்களின் மனதில் அதிகமாக ஊட்டவேண்டும் என கெஸ்ரோ அமைப்பின் தலைவரும் அக்கரைப்பற்று அல்-ஸபா கனிஷ்ட வித்தியாலய அதிபருமான ஜெ.எம்.அன்வர் நௌசாட் தெரிவித்தார்.

ஆயிஷா முன்பள்ளி பாடசாலையின் சிறுவர் தின நிகழ்வுகள் அக்கரைப்பற்று நீர் பூங்காவில் சனிக்கிழமை (30) நடைபெற்றது அந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், ஒவ்வொரு பெற்றோரும் தங்களது பிள்ளைகள் வைத்தியராக, பொறியியலாளராக, சமுதாயத்தில் மதிப்புமிக்க ஒருவராக வர வேண்டும் என்ற கனவோடு இருக்கிறார்கள். அந்த கனவுகளுக்கு நாம் வழிகாட்டியாக இருக்கவேண்டும். போட்டி நிகழ்வுகளின்போது வெற்றிபெற ஊக்கப்படுத்தும் நாம், தோல்வி யைக்கண்டு துவண்டுவிடக் கூடாது என்ற உண்மையையும் உத்வேகத்தையும் அவர்களுக்கு வழங்க வேண்டும்.

அதேபோல் முயற்சிகள் மூலமாக கனவுகளை வெல்வதற்கு விடாமுயற்சி முக்கியமானது என்பதை அவர்கள் மனதில் விதைக்க வேண்டும். ஒரு குடும்பத்தின் வாழ்க்கையை மாற்றுகின்ற அளப்பரிய சக்தி சிறுவர்களுக்கே உண்டு. சமூகச் சூழலில் அதி உன்னதமான வளமாக இருப்பவர்களும் சிறுவர்களே. அற்புதமான அழகிய பண்புகளோடு வளர்கின்றபோது, அவர்கள் மகத்துவம், விழுமியம், நம்பிக்கை, நற்சிந்தனை ஆகியவற்றைக்கொண்டு அவர்களைப் பின்தொடர்கின்ற சந்ததிக்கும் உத்வேகம் கொடுக்கின்றவர்களாக உருவெடுப்பார்கள் எனவும் கூறினார்.

# புதையல் தோண்டிய அறுவர் கைது

*அப்துல்சலாம் யாசீம்*

திருகோணமலை, கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இடிமன் பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் 06 பேரை ஞாயிற்றுக்கிழமை(01) இரவு கைது செய்துள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியா இடிமன் பகுதியிலுள்ள வீடொன்றில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 06 பேர் கைதுசெய்யப்பட்டதுடன், சொகுசு வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்கள் கிண்ணியா, இறக்கக்கண்டி மற்றும் கம்பஹா பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் கடந்த தேர்தலில் பிரதான அரசியல் கட்சியொன்றில் வேட்பாளராகக் களமிறங்கிய பெண் ஒருவரின் வீட்டில் புதையல் தோண்டுவதற்கான பூசை நிகழ்வுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த நபர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதுடன் திங்கட்கிழமை(02) நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பரிசு கொடுக்க வந்த போர்வையில் ஐந்து பவுண் தங்கச்சங்கிலி பறிப்பு

*நிலாவெளி செய்தியாளர்*

திருகோணமலை நகரின் துறைமுகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிறீன் வீதியில் பரிசு கொடுக்க வந்த போர்வையில் 05பவுண் தங்கச்சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திங்கட்கிழமை (02) காலை குறித்த இளைஞர், வீடொன்றுக்குள் சென்று பரிசொன்று விழுந்துள்ளதாகவும் அதனை கொடுக்க வந்ததாகவும் கூறி வீட்டுக்குள் நுழைந்துள்ளார். பின்னர் வீட்டிலிருந்த வயோதிபப் பெண் அணிந்திருந்த ஐந்து பவுண் கொண்ட தங்கச்சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளார்.

இலக்கத் தகடு இல்லாத இரு சக்கர வாகனத்தில் வந்த இளைஞர் ஒருவரால் மேற்படி கொள்ளைச் சம்பவம் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் குறித்த இளைஞரை துரத்திச் சென்ற ஒருவரின் தகவலின் அடிப்படையில் தேடுதல் முடுக்கி விட்டுள்ளதாகவும் துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# மீண்டும் தலைவரான ஜஸ்வர் உமர்



இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் தலைவராக இரண்டாவது தடவையாக ஜஸ்வர் உமர் தெரிவானார். கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத் தேர்தலில் ஜஸ்வர் தலைமையிலான குழுவினருக்கு 45 வாக்குகளும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட தக்ஷித்த சுமதிபால குழுவினருக்கு 20 வாக்குகளும் கிடைத்தன.

ஜஸ்வர் குழுவினரின் வேட்பு மனுவில் தலைவர் பதவிக்கான வேட்பாளராக குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் ஜஸ்வர் இரண்டாவது தடவையாக தலைவராகத் தெரிவாகியுள்ளார். இந்தத் தேர்தலில் 65 லீக்குள் வாக்களித்ததுடன், செலுத்தப்பட்ட அனைத்து வாக்குகளும் செல்லுபடியானதாக தேர்தல் குழுவினர் அறிவித்தனர். பொலிஸ் உதைபந்தாட்ட லீக் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

**தேர்தலில் வெற்றிபெற்ற ஜஸ்வர் குழு விபரம்**

யூ.எல்.ஜஸ்வர் (தலைவர்), ரஞ்சித் ரொட்றிகோ, டொக்டர் வீ.மனில் பெர்னாண்டோ, எஸ்.டி.நாகாவத்த, கே.எம்.எம்.பீ. கருணாதிலக்க (நால்வரும் உதவித் தலைவர்கள்), ஏ.டபிள்யூ. அப்துல் கபார், ஜகத் டி சில்வா, சய்வ் யூசுப், எம்.ஐ.எம்.அப்துல் மனாப், இந்திக்க தேனுவர, எம்.சி.எம்.ரிஸ்வி, சீ.தீபிகா குமாரி (8 பேரும் உறுப்பினர்கள்).

# பயிற்சி ஆட்டத்தில் இன்று ஆப்கானை எதிர்கொள்ளும் இலங்கை




10 அணிகள் பங்கேற்கும் 13ஆவது ஐ.சி.சி. உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகி நவம்பர் 19ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில், உலகக்கிண்ணத் தொடருக்கான பயிற்சிப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு அணிகளுக்கும் இரு பயிற்சிப் போட்டிகள் காணப்படுகின்றன.

இதில் இலங்கை அணி தங்களது முதல் ஆட்டத்தில் பங்களாதேஷிடம் படுதோல்வியடைந்த நிலையில், இன்று குவஹாத்தியில் ஆப்கானிஸ்தான் அணியை எதிர்கொள்கிறது. இன்று மூன்று ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. முதலாவதாக இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் மோதும் பயிற்சி ஆட்டம் பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகிறது.

இரண்டாவது பயிற்சி ஆட்டம் இந்தியா மற்றும் நெதர்லாந்து அணிகளுக்கிடையில் திருவானந்தபுரத்திலும், மூன்றாவது பயிற்சி ஆட்டம் பாகிஸ்தான் மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் ஹைதராபாத்திலும் நடைபெறவுள்ளன.

இலங்கை அணி தங்களது முதல் உலகக்கிண்ண ஆட்டத்தில் 7ஆம் திகதி சனிக்கிழமை டில்லியில் வைத்து தென்னாபிரிக்க அணியை சந்திக்கிறது.

## விளையாட்டுத் துளிகள்

பாகிஸ்தானில் 2025ஆம் ஆண்டு இடம்பெறும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்குப் பின் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறவுள்ளதாக பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் ஷகீப் அல்-ஹசன் தெரிவித்துள்ளார். இந்தியாவில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடருக்குப் பின்னர் தனது சர்வதேச கிரிக்கெட் ஓய்வு முடிவை அறிவிப்பேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

..................

இலங்கையின் பேட்மிண்டன் வீரரான நிலுக்க கருணாரத்ன ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். சர்வதேச ஒலிம்பிக் குழு தலைமையகத்தில் இடம்பெற்ற அமர்வில் வைத்தே இவர் தனது ஓய்வை அறிவித்துள்ளார். நிலுக்க கருணாரத்ன மூன்று தடவைகள் ஒலிம்பிக்கிலும் பல சர்வதேச போட்டிகளில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பல பதக்கங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

..................

நெதர்லாந்துக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் அவுஸ்திரேலிய வீரர் மிட்செல் ஸ்டார்க் ஹாட்ரிக் விக்கெட் எடுத்து அசத்தினார். அவர் வீசிய முதல் ஓவரின் 5ஆவது பந்தில் மேக்ஸ் ஓடௌத் விக்கெட்டையும் கடைசி பந்தில் வெஸ்லி பரேசி விக்கெட்டையும் வீழ்த்தினார். அதன்பின் அவர் வீசிய அடுத்த ஓவரின் முதல் பந்தில் பாஸ்-டி-லீட் விக்கெட்டை எடுத்து ஹாட்ரிக் விக்கெட்டுகள் எடுத்து அசத்தினார்.

# தேசியத்தில் மீண்டும் சாதித்த கல்முனை ஸாஹிரா



**அட்டப்பள்ளம் செய்தியாளர்**

கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தைக்வொண்டோ சுற்றுப் போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை மாணவர்கள் 1 வெள்ளி மற்றும் 2 வெண்கலம் உட்பட 3 பதக்கங்களைப் பெற்று சாதனை நிலைநாட்டியுள்ளனர்.

செப்டெம்பர் மாதம் 16, 17, 18 ஆகிய திகதிகளில் இரத்தினபுரி உள்ளக விளையாட்டரங்கில் கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட அகில இலங்கை பாடசாலைகளுக் கிடையிலான தேசிய மட்ட தைக்வொண்டோ சுற்றுப் போட்டியில் மேற்படி வெற்றிவாகை சூடப்பட்டது.

இதில் 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான ஸ்பாறிங் நிகழ்ச்சியில் ஜே.ஏ.ஸுறைப் வெள்ளிப் பதக்கமும், ஏ.வி.றஸா அஹமட், ஆர்.எம்.அக்தாஸ் ஆகியோர் தத்தமது எடைப் பிரிவுகளில் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

இதில் ஜே.ஏ.ஸுறைப் தொடர்ந்து 2ஆவது முறையாக தேசிய ரீதியில் வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார். சென்ற வருடம் இப்பாடசாலை அணி 14 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கையில் ஓவரோல் போய்ஸ் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

# துறைநீலாவணை யுனைட்ட் ரி10 சம்பியன் கிண்ணம் இலவன் ஸ்டார் வசமானது



துறைநீலாவனை யுனைடட் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த யுனைடட் ரி10 சம்பியன் கிண்ணத்தை ஒலுவில் இலவன் ஸ்டார் கழகம் தன்வசப்படுத்தியது.

64 அணிகள் பங்குபற்றிய இச்சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இலவன் ஸ்டார் மற்றும் கதிரவன் வி.கழகம் ஆகிய அணிகள் மோதிய இவ்விறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கதிரவன் அணியினர் 10 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலவன் ஸ்டார் அணியினர் 7.2 ஓவர்களில் வெற்றியிலக்கை அடைந்தனர். போட்டியின் இறுதிப் போட்டியில் ஆட் நாயகனாக இலவன் ஸ்டார் அணியின் பாசித் தெரிவாகியதுடன், தொடர் ஆட்டநாயகனாக அதே அணியைச் சேர்ந்த அஸ்மத் தெரிவுசெய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# சர்வதேச விளையாட்டு ஒருங்கிணைப்புக் குழு நியமனம்

இலங்கையில் கிரிக்கெட்டின் வளர்ச்சி, சுயாதீனத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மையைப் பாதுகாப்பதற்காக சர்வதேச மற்றும் தேசிய கிரிக்கெட் குழுக்களைக் கண்காணித்தல், தொடர்புகொள்ளுதல் மற்றும் ஒருங்கிணைப்பது ஆகியவற்றை முதன்மை பணியாகக்கொண்டு கிரிக்கெட்டுக்கான மூவரடங்கிய சர்வதேச விளையாட்டு ஒருங்கிணைப்புக் குழுவை விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நியமித்துள்ளார்.

சிதத் வெத்தமுனி, உபாலி தர்மதாச மற்றும் ரகித ராஜபக்ஷ ஆகியோரைக்கொண்ட மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் மொழியிலும் வர்ணனையாளராக செயற்படவுள்ள ரஸல் ஆர்னோல்ட்



உலகக்கிண்ணத் தொடருக்கான வர்ணனையாளர் குழுவில் இந்தியாவைச் சேர்ந்த முன்னாள் கிரிக்கெட் வீரர்களான சுனில் கவாஸ்கார், ரவி சாஸ்திரி, மு.சிறிகாந்த், கௌதம் கம்பீர், இர்பான் பதான் மற்றும் ஹர்பஜன் சிங், தினேஷ் கார்திக், மொஹமட் கைப் மற்றும் இந்தியாவின் முன்னாள் தலைவி மிதாலி ராஜ், மேற்கிந்திய தீவுகளின் முன்னாள் வீரர் இயன் பிஷப், அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொண்டிங், வக்கார் யூனூஸ், டேல் ஸ்டெய்ன், கெவின் பீட்டர்ஷன், ஷோன் பொல்லோக் ஆகியோரோடு இம்ரான் தாஹிரும் உலகக்கிண்ண வர்ணனையாளர்கள் குழாத்தில் இணைந்திருக்கின்றார்.

இவர்கள் தவிர, ஹர்சா போக்லே, மெதிவ் ஹய்டேன் மற்றும் பாகிஸ்தானின் முன்னாள் வீரர் ரமீஸ் ராஜா ஆகியோரும் உலகக்கிண்ண வர்ணனையாளர்கள் குழாத்தில் இடம்பிடித்திருக்கின்றனர்.

இதேநேரம் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை வீரரான ரஸல் ஆர்னோல்ட் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வர்ணனையாளராக செயற்படுவார் எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

# காதல் தோல்வியால் தற்கொலைக்கு இறங்கிய வீரர்

பிரெஞ்சு கிளப் அணியான OGC Niceயின் வீரர் ஒருவர் Magnan பாலத்தின் மீது ஏறி, கீழே குதித்து தற்கொலை செய்துகொள்ளப்போவதாக மிரட்டியுள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த லிகு1 கிளப் உளவியல் நிபுணர், தீயணைப்பு வீரர்கள், மற்றும் பொலிஸை உடனடியாக அங்கு அனுப்பியுள்ளது. குறித்த வீரர் A8 நெடுஞ்சாலையிலுள்ள 100 மீற்றர் உயரமுள்ள Magnan பாலத்தில் நின்று தற்கொலைக்கு மிரட்டியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதன் காரணமாக பயிற்சியாளர் பிரான்செஸ்கோ ஃபரியோலி உடன் திட்டமிடப்பட்ட செய்தியாளர் சந்திப்பை கிளப் இரத்துச்செய்துள்ளது. இதற்கிடையில், Nice-Matin கூற்றுப்படி பெயர் வெளிப்படுத்தப்படாத அந்த வீரர் காதல் தோல்வி காரணமாக இவ்வாறு நடந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மயிரிழையில் பதக்கத்தை இழந்த இலங்கை: இன்று சாதிப்பாரா கயந்திகா?



சீனாவின் ஹாங்சூ நகரில் நடைபெற்றுவரும் 19ஆவது ஆசிய விளையாட்டு விழாவில் பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குகொண்ட இலங்கை வீராங்கனை கயந்திகா அபேரட்ன மயிரிழையில் பதக்கம் பெறும் வாய்ப்பை இழந்தார். போட்டியை அவர் 4 நிமிடங்கள் 18.77 செக்கன்களில் நிறைவுசெய்தாலும், 3.20 செக்கன்களால் வெண்கலப் பதக்கம் வெல்லும் வாய்ப்பைத் தவறவிட்டார்.

பஹ்ரைனின் வின்பிரெட் யாவி 4 நிமிடங்கள் 11.65 செக்கன்களில் போட்டியை நிறைவுசெய்து தங்கப் பதக்கத்தையும், இந்தியாவின் ஹார்மிலான் பைன்ஸ் 4 நிமிடங்கள் 12.74 செக்கன்களில் போட்டியை நிறைவுசெய்து வெள்ளிப் பதக்கத்தையும் சுவீகரித்தனர்.

குறித்த ஓட்டத்தில் 17 வீராங்கனைகள் பங்குபற்றியிருந்ததுடன், 36 வயதான கயந்திகா, இம்முறை ஆசிய விளையாட்டு விழா இலங்கை அணியின் தலைவருமாவார். இதற்கு முன்னர் நடைபெற்ற 2014 மற்றும் 2018 ஆகிய இரண்டு ஆசிய விளையாட்டு விழாக்களிலும் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய அனுபவத்தையும் அவர் பெற்றுக்கொண்டுள்ளார்.

இருப்பினும், இறுதியாக கடந்த ஜுலை மாதம் தாய்லாந்தில் நடைபெற்ற ஆசிய சம்பியன்ஷிப் போட்டியில் 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் கயந்திகா அபேரட்ன வெண்கலப் பதக்கத்தை வென்றிருந்தார். இன்று பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் கயந்திகா களமிறங்கவுள்ளார்.

இம்முறை ஆசிய விளையாட்டு விழாவின் 9ஆவது நாள் நிறைவடையும்போது இலங்கை ஒரேயொரு வெள்ளிப் பதக்கத்துடன் பதக்கப்பட்டியலில் 29ஆவது இடத்தில் உள்ளது.




# கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டியில் பட்டிருப்பு வலயம் முதலிடம்




**மட்டக்களப்பு நிருபர்**

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டியில் பட்டிருப்பு கல்வி வலயம் 179 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தை வென்றுள்ளது.

கந்தளாய் லீலாரத்தின மைதானத்தில் ஐந்து நாட்கள் நடைபெற்று கடந்த சனிக்கிழமை (23) நிறைவடைந்த இந்தப் போட்டியில் முதலிடம் பெற்ற பட்டிருப்பு கல்வி வலயத்தில் செட்டிபாளையம் மகாவித்தியாலயம் 9 தங்கப்பதக்கங்களையும், களுதாவளை மகா வித்தியாலயம் 8 தங்கப்பதக்கங்களையும் வென்றமை குறிப்பிடத்தக்கது.

திருக்கோவில் கல்வி வலயம் மற்றும் அக்கரைப்பற்று கல்வி வலயங்கள் தலா 92 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தை வென்றுள்ளன.

கிழக்கு மாகாண பாடசாலை மட்ட மெய்வல்லுனர் போட்டிகள் கடந்த 19.09.2023 தொடக்கம் 23.09.2023 வரை இடம்பெற்று முடிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7